1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.
Telephone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

78-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 42-ம் இலக்கம்

### நூற்றாண்டு விழா

சென்வின்சென்ற் டீபோல் சபையை அடியிட்டவரான பிறெடறிக் ஓசானம் அவர்களை மகிமைப்படுத்தும் நோக்கமாக அவர் பரமபதஞ்சேர்ந்த நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டம் இலங்கையிலே வருகிறமார்கழிமாதம் 6-ந் திகதியன்று கொழும்பு, சஞ்சூசைப் பர்கலூரியிலே அதிமேற்றிராணியாண்டவரின் தலைமையில் நடந்தேறவிருக்கிறது.

### தூத்துக்குடி மேற்றிராணியார்

தூத்துக்குடியின் முன்னாள் மேற்றிராணியாரும், தற்போது அமதாசாநகரின் கௌரவமாத்திரையான மேற்றிராணியாராக நியமனஞ்செய்யப் பெற்றிருப்பவருமான மகா வந். ரி. பிரான்சிஸ் றோச் ஆண்டவர் அவர்கள் இம்மாதம் 10-ந்திகதி றோமாபுரியிலிருந்து ஆகாயத்தபால்மூலம் நமக்கு அனுப்பிய திருமுகமொன்றிலே பின்வருமாறு தெரிவித்திருக்கின்றார். நாம் மேற்றிராசன ஆளுகை நடத்திய 30 வருடங்களிலும் ஆறுவருடங்களுக்கு ஒருமுறையாக றோமாபுரிக்கு ஐந்துமுறை வந்திருக்கிறோம். மரியாயின வருடமாகிய அடுத்தவருடத்திலே பரிசுத்த பாப்பாசர் மூத். பத்தாம் பத்திநாத பாப்பானவருக்கு ஆர்ச்சியசிஷ்டபட்டம் அருளவிருக்கின்றார். இம்மாதம் 10-ந்திகதியன்று நாம காஸ்ரெல்காண்டலபோவிலே பரிசுத்தபிதாவின் அந்தரங்கபேட்டி பெறலானோம். அவர் பெரும்பாரமான தமது கடமைகளை நிறைவேற்றிவந்தபோதிலும் சுகமும், பலமும், சந்தோஷமுமாய் இருக்கின்றாரென்பதே.

### பம்பலப்பிட்டிக் காணி

பம்பலப்பிட்டிக் காணியிலே புதிய சுப்பிறீங்கோடு அமைக்கும் வேலை உடனேதானே நிறுத்தப்பட வேண்டுமென்றும், அந்தக்காணி வீடமைப்புத் திட்டப்படி வீடுகள்கட்டுமாறு புதிய வீடமைப்புமந்திரியாரிடம் கையளிக்கப்பட வேண்டுமென்றும் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் கட்டளை பிறப்பித்திருக்கின்றார். இந்தக்காணி ஏறக்குறையப் பத்துஏக்கர் விஸ்தீரணமுடையது. அரசாங்கத்தால் எட்டுலட்சம் ரூபாவுக்குமேல் விலை கொடுத்து வாங்கப்பட்டது. இதிலே இரண்டு ஏக்கரில் இளங் குற்றவாளிகளின்கோடு அமைக்கப்பட்டுவிட்டது. அதனால், மீதியான எட்டுஏக்கர்நிலமும் வீடுகள் அமைப்பதற்கென்று பயன்படுத்தப்படும். இந்தக்காணியைக் கைத்தொழில் – வீடமைப்பு – சமூகசேவை மந்திரியார் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பார்வையிட்டபின் அதிலே பம்பாயில் கடலைநிரப்பியபகுதியில் கட்டப்பட்டுள்ள வீடுகளைப் போலக் கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்துக்குச் சிபாரிசுசெய்யத் தீர்மானித்திருக்கின்றார்.

## சுதேச வர்த்தமானம்

### கைத்தொழில் மந்திரியார்

கைத்தொழில் – கடற்றொழில் மந்திரியாரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் புதியபிரதமரது கேள்வியின் பேரிலே தமதுபதவியை இராசினாமாச்செய்து அனுப்பியகடிதம் சென்றசனிக்கிழமை கவர்னர் – ஜெனறல்கையில் போய்ச்சேராயிற்று. அதனால் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் அதிகாரமுறையிலே அன்றுமுதல் கைத்தொழில் மந்திரிபதவியையும கையேற்றுள்ளனர். அநேகவருடங்களாகக் காலியாய்இருந்துவருகின்ற கைத்தொழில் தலைவர்பதவிக்குத் தகுதியானஒருவரை இவர் தற்போது தெரிவுசெய்யவிருக்கின்றார். வர்த்தக மந்திரியார் திரு. ஆர். ஜி. சேனநாயக அவாகளே இனிமேல் கடற்றொழில் மந்திரியாராயும் இருந்துவருவார்.

### மூடப்பட்ட தவறணைகள்

யாழ்ப்பாண மதுவிலக்குச்சபையாரின் முயற்சியாலே சாராயத்தவறணைகளை மூடும்விஷயமாய் வாக்கெடுக்கப்பட்டு ஏற்பட்டவெற்றியாலே சங்கானை, பளை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி எனுமிடங்களில் இருந்துவந்த சாராயத்தவறணைகள் இம்மாதம் 1-ந்திகதியன்று மூடப்படலாயின. யாழ்ப்பாணக்குடாநாட்டிலே, நல்லூர், கரையூர், பெரியகடை, வல்வெட்டித்துறை எனுமிடங்களில் இன்னும்எஞ்சியிருக்கும் சாராயத்தவறணைகளையும் மூடுவதற்காக வருகிற மார்கழிமாதத்தில் வாக்கெடுக்கப்படும்.

### இருப்பிலுள்ள அரிசி

இலங்கை அடுத்தவருடத்திலே பர்மாவிலிருந்து 2லட்சம்தொன் அரிசியும், சீனாவிலிருந்து 2லட்சத்து 70ஆயிரம்தொன் அரிசியும் கொள்வதற்கான ஒப்பந்தங்கள் செய்திருக்கின்றது. தற்போதுஇலங்கையிலுள்ள அரிசிப்பண்டகசாலைகளில் நிலையானஇருப்பாக 1லட்சத்துப் 15ஆயிரம்தொன் அரிசி இருந்துவருகிறது. இந்நாட்டு மக்களின் தேவைக்கு இந்தஅரிசி மூன்று மாதங்களுக்குப் போதியதாகும். ஆதற்கிடையிலே மாதந்தோறும் 30ஆயிரம் தொன்அரிசி இறக்குமதியாகிக்கொண்டிருக்கும். இலங்கையிலே அரிசியின் நிலைமை இப்போதுபோலஇதற்குமுன் எப்போதாவது அதிகம்நன்றாய் இருக்கவில்லை ஆனால், தற்போதுஅரிசி மேலதிகமாக இருப்பதையிட்டு அரசாங்கம் சீனாவுடன்செய்துள்ள ஒப்பந்த அரிசியில் 20ஆயிரம்தொன்னைப் பிறநாடுகளுக்கு ஆதாயத்துடன்விற்க ஆயத்தப்படுகின்றது. யப்பான்உட்பட ஏற்கனவே சிலநாடுகள் அதைவாங்க முன்வந்திருக்கின்றன.

### கொத்துஒன்று 90 சதம்

கூப்பனுக்குப்புறம்பாக விற்கப்படும் அரிசிக்குச் சென்றசனிக்கிழமைதொடக்கம் கொத்தொன்றுக்கு நாலுசதம் கூட்டப்பட்டுள்ளது. அதனால் தற்போது அதன்விலை கொத்தொன்று 90 சதம். இறக்குமதிசெய்யப்பட்ட அரிசியிலே கூப்பனுக்குப் புறம்பாக உதவப்படும் அரிசியைக் கட்டுப்படுத்தும் நோக்கமாகவே அரசாங்கம் இவ்வாறு செய்யத் தீர்மானிக்கலாயிற்று. அன்றுமுதல் ஒவ்வோர்மூடை அரிசிக்கும் 3 ரூபா 20 சதம் கூட்டப்பட்டுள்ளது.

### மூன்று செனற்றர்கள்

நீதிமந்திரியார் சேர் ஒலிவர் குணதிலக அவர்களை மீண்டும் ஓர் செனற்றராகக் கவர்னர்–ஜெனறல் நியமனஞ்செய்திருக்கின்றார். அவரின் செனற்றர்பதவிகாலம் இம்மாதம் 15-ந்திகதி முடிவடையலாயிற்று. இன்னும் கைத்தொழில் – வீடமைப்பு – சமூகசேவை மந்திரியார் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களையும், புதிய நீதிமந்திரியார் திரு. ஈ. பி. விக்கிரமநாயக அவர்களையும் செனற்றர்களாகக் கவர்னர்–ஜெனறல் நியமனஞ்செய்திருக்கின்றார்.

### பெரும்போகநெல்வேளாண்மை

இலங்கையிலே தற்போது 65,000 ஏக்கர்வயலில் பெரும்போக நெல்வேளாண்மை நடைபெறுகின்றது. இதுவரையிற்போல இனிமேலும் மழை சீராயிருப்பின் இப்பெரும் போகத்தில் 1 கோடியே 90 லட்சம் புசல்நெல் விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உழவுக்கு எருமைமாடுகள், எருத்துமாடுகளுடன் 300 இயந்திரக் கலப்பைகளும் உபயோகிக்கப்படுகின்றன. ஒவ்வோர் இயந்திரக் கலப்பையும் 150 ஏக்கர் வயல்வீதம் 45,000 ஏக்கர்வயலை உழுதுமுடிக்க விருக்கின்றன.

### யாழ்ப்பாணத் தேர்தல்மனு

சென்றபொதுத்தேர்தலிலே யாழ்ப்பாணநகர்தொகுதிப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பெற்றவரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் தேர்தல் முறைகேடானதென ஆட்சேபித்துத் திரு. எஸ். வி. குணசிங்கம், திரு. சி. ஜே. சின்னப்பாஎனுமிருவரும் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனு கொழும்பிலே சென்றதிங்கட்கிழமை முதல் நீதியரசர் சங். வீரசூரிய அவர்களால் விசாரணைசெய்யப்பட்டு வருகிறது. இந்தத்தேர்தலமனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாதென்று திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள்செய்த ஆரம்பஆட்சேபனைகள் நான்கையும் நீதியரசர் நிராகரித்துவிட்டனர்.

### பிரதமரின் மன்னார்விஜயம்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் இந்தியஹைகம்மிஷனர் திரு. சி. சி. தேசாய் சமேதராய் வருகிற கார்த்திகை 10-ந்திகதியன்று கொழும்பிலிருந்து மன்னாருக்குச்சென்று மறுநாள் அங்குதங்கிக் கள்ளக்குடியேற்ற பிரச்சினைபற்றி நேரில்யாவையும்ஆராய்வார். பின்னர் அன்றுதினமே அங்கிருந்து கொழும்புக்குப்புறப்படுவார்.

### சிறுத்தையின் திருவிளையாடல்

அச்சுவேலிதெற்கிலுள்ள தோட்டங்கள், வயல்களிலே கட்டப்பட்டிருந்த ஆடுமாடுகளில் ஏறக்குறைய நாற்பதைக் கடந்தசிலதினங்களில் சிறுத்தைப்புலிஒன்று பலியெடுத்திருக்கிறது. கொல்லப்பட்ட மிருகங்களில் காணப்பட்ட அடையாளங்களிலிருந்து புலிஒன்றுதான் இந்தத்திருவிளையாடலை நடத்தியதாகக் கண்டறியப்படலாயிற்று. அண்மையிலே புலியின் அடிச்சுவடுகளும் கண்டறியப்பட்டன. அதனால்அப்பகுதியிலே இளைஞர்கோஷ்டிகள் இரவில் காவல்செய்கின்றன.

### அப்பீல்மனு தள்ளப்பட்டது

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபைக்குச் சாவகச்சேரிப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றவரும், தற்போது நீதிமந்திரியாரின் பாராளுமன்றக் காரியதரிசியாய் இருப்பவருமான திரு. வி. குமாரசாமிஅவர்களின் தேர்தலைஆட்சேபித்துத் திரு. கே. இராமலிங்கம் அவர்கள் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனு அப்போது நீதியரசர் சங். எச். ஏ. டி சில்வாஅவர்களால் விசாரணைசெய்து செலவுதொகையுடன் தள்ளப்படலாயிற்று. பிந்தஅவர் சமர்ப்பித்த தேர்தல்அப்பீல்மனு பிரதமநீதியரசர், நீதியரசர்நாகலிங்கம், நீதியரசர்கிறேஷியன் எனும்மூவராலும் விசாரணைசெய்யப்பெற்று அதுவும் செலவுதொகையுடன் சென்றபுதன்கிழமை தள்ளப்படலாயிற்று.

### மாணவரின் வயதுக்கட்டுப்பாடு

வருகிறகார்த்திகை 7-ந்திகதி நடைபெறவிருக்கும் 8-ம் வகுப்புத் தகுதிப் பரீட்சையிலே சித்திபெறத்தவறுகின்ற பதினாறுவயதுக்குமேற்பட்ட மாணவர்கள்எவரும் இனிமேல் அரசினர்பாடசாலைகளில் தொடர்ந்துபடிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அரசினர் பாடசாலைகளில் இனிமேல் 8-ம் வகுப்பிலும், அதற்குக்கீழ்ப்பட்ட வகுப்புகளிலும் படிக்கிறமாணவர்கள் பதினாறு அல்லது அதற்குக்குறைந்த வயதுடைவர்களாய் இருக்கவேண்டும். அரசினர் உதவிப்பணம்பெறும் பாடசாலைகளிலும், தனிப்பட்டபாடசாலைகளிலும் பதினாறுவயதுக்கு மேற்பட்டமாணவர்கள் தொடர்ந்துபடிக்கலாம். ஆனால், அரசாங்கம அவர்களின்கல்விக்கென்று உதவிப்பணம் வழங்கமாட்டாது. பாடசாலைகள் விதிக்கும்சலாரை அவர்கள் செலுத்தவேண்டும்.

### S. S. C. Referred Candidates

Special Classes in Arithmetic and in English will commence on 2-11-53 at the Institute of Higher Studies 73, Pt. Pedro Road, Anaipanthy.

### BOOK REVIEW

### THE WORLD'S FIRST LOVE

#### An Appreciation

Bishop Sheen is a convincing speaker and a pleasant writer. In the World's First Love he is both convincing and pleasing. In this book Sheen answers so clearly and in a masterly manner many questions of the day—questions that confront us in public and private, in the family and the factory—as to convince not only the Catholic but also the sincere seeker after truth.

With the Blessed Virgin as the main theme, the writer examines the various aspects of her life and draws practical conclusions applicable to our soul-life. In the second part Mary is shown as not merely the Mother of Jesus, but the Universal Mother of all mankind. Reference to the various religious and cultures of the world and their quest of an ideal Woman and Mother, brings out that this ideal long expected by the nations is found in the Blessed Mother of God, who was promised at the beginning of history. The reader is bound to agree with the author that the Blessed Mother of God is the way of salvation for all nations of the world.

The Christian too finds his ideal in the life of the Mother of God who copied in herself the life and virtues of Christ her Son.

This book is bound to have a universal appeal to all men.

*Price 15s.*

**Messrs. Browne & Nolan,**
41/42 Nassau Street,
DUBLIN.

## பெற்றோர்தின விழா

பாதகுலமக்களின் பதிகளுள்ஒன்றுன பேசாலைக் கத்தோலிக்க தமிழ்ப் பெண்பாடசாலையில் சென்ற 18-10-53 ஞாயிறுவாரம் பெற்றோர்தினவிழா நடந்தேறியது. அன்றுகாலை திவ்விய பூசை முடிந்ததும் மாணவிகளும், பெற்றோரும், மற்றோரும் பாடசாலை முன்பாக ஒருங்குகூடவே, மாணவிகள் பாடசாலைக்கீதம் படிக்க, வண. கட்டளைக்குரவர் பாடசாலைக்கொடியை ஏற்றி வைத்தனர். பின்னர் மாணவிகளின் கைப்பணிக்காட்சியைச் சுவாமியவர்கள் திறந்துவைக்கவே பெற்றோர் தங்கள் மக்களின் கைப்பணிகளைக்கண்ணுற்று மகிழ்ச்சி அடைந்தனர். மாலை 6மணிக்குப் பேசாலைமக்கள் பெருந்திரளாகப் பாடசாலையில் ஒன்றுகூடினர். கட்டளைக்குரவர், மன்னார்ப்பகுதி டி. ஆர். ஓ. அவர்கள் சமேதராய்ச் சமுகமளிக்க, மாணவிகள் பாடசாலைக்கீதம் படித்ததும் ஆசிரியை றெஜீனு பங்கிராஸ் பாடசாலை அறிக்கையை வாசித்தனர். அதிலே இற்றைக்கு 27ஆண்டுகளின்முன் இருஆசிரியரையும், ஐம்பதுமாணவர், மாணவிகளையும் கொண்டிருந்த இப்பாடசாலை தற்போது மாணவர்கள்நீங்கலாக 160 மாணவிகளையும், ஆறுஆசிரியைகளையும் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அறிக்கை வாசிக்கப்பட்டபின் டி. ஆர். ஓ. அவர்கள் பேசியபோது, பேசாலை எல்லாக் கருமங்களிலும் முன்னேற்றமடைய இங்குள்ள பாடசாலைகளே காரணமெனக்கூறினர். ஆசிரியர் ஏ. செபஸ்ரியான்குரூஸ்அவர்கள், கன்னிகாஆசிரியைகள் கற்பிப்பதின்பயனையும், பெண்மக்களின்கல்வியில் பெற்றோர்எடுக்கவேண்டிய கரிசனையையும்எடுத்துரைத்தனர். பாடசாலைஆசிரியைகள் எல்லோர்போராலும் ஆசிரியைறெஜீனுபங்கிராஸ் நன்றித்துதிகூறினர். ஈற்றில்திருமதி ஏ. ஜெயமேரி திரேஸ் குரூஸ் மாணவர்கள்போரால் ஆற்றியசொற்பொழிவிலே, பெற்றோர் தங்கள்பாடசாலைக்குச் செய்யவேண்டிய உதவிகள் சிலவற்றைக் கேட்டுநின்றார். பின்னர் "பாக்டாட்பட்டின நாவிதன்" எனும் கதை ஆங்கிலத்தில் சித்திரமாக நடிக்கப்பட்டது. சிறுமிகளின் நடனம் நடைபெற்றது. பபியோலாவின்சரிதை எல்லோரும்பார்த்து இன்புறுமாறு சிறப்பாகநடிக்கப்பட்டுத் தேசியகீதத்துடன் விழாமுடிவெய்திற்று.

## பள்ளிக்கூடப் புஸ்தகங்கள்

இலங்கைப் பாடசாலைகளின்
உபயோகத்திற்காக
விசேஷமுறையில் எழுதப்பட்டது.

### ஞானோபதேசம்

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| சின்னக் குறிப்பிடம் | ... | | 20 |
| பெரிய குறிப்பிடம் | ... | | 30 |

### கத்தோலிக்க வாசகம்

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| கீழ்ப் பிரிவு | ... | | 50 |
| மேற் பிரிவு | ... | | 50 |
| இரண்டாம் புத்தகம் | ... | | 60 |
| மூன்றும் புத்தகம் | ... | | 70 |
| நாலாம் புத்தகம் | ... | | 80 |
| ஐந்தாம் புத்தகம் | ... | | 90 |

### நவமணி வாசகம்

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| கீழ்ப் பிரிவு | ... | | 50 |
| மேற் பிரிவு | ... | | 50 |
| இரண்டாம் வகுப்பு | ... | | 60 |
| மூன்றும் வகுப்பு | ... | | 70 |
| நாலாம் வகுப்பு | ... | | 80 |
| ஐந்தாம் வகுப்பு | ... | | 90 |
| ஆறும் வகுப்பு | ... | | 90 |
| ஏழாம் வகுப்பு | ... | 1 | 00 |

### கணிதம் (S. A. Edward)
**Revised by J. V. Gunaratnam, B.A.**

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... | 1 | 25 |
| மூன்றும் வகுப்பு | ... | 1 | 50 |
| நாலாம் வகுப்பு | ... | 1 | 75 |
| ஐந்தாம் வகுப்பு | ... | 1 | 90 |
| ஆறும் வகுப்பு | ... | 2 | 00 |
| ஏழாம் வகுப்பு | ... | 2 | 00 |

### மனக்கணிதம்

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... | | 50 |
| மூன்றும் வகுப்பு | ... | | 60 |
| நாலாம் வகுப்பு | ... | | 70 |
| ஐந்தாம் வகுப்பு | ... | | 80 |

### தமிழ்உறுப்புக் கோப்பிகள்

2-ம், 3-ம், 4-ம், 5-ம் வகுப்பிற்கு 30

### சுவைதரும் தமிழ்
(இரத்தினம்செல்லையா, M.A., M. Litt.)

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 1 | 00 |
| இரண்டாம் பாகம் | ... | 1 | 00 |

## மத்திய வகுப்புகளுக்காக
### புதிதாக விசேஷமுறையில் எழுதப்பட்ட
## கணிதங்கள்

### எண் கணிதம்

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | ... | 2 | 00 |
| ஏழாம் வகுப்பு | ... | 2 | 00 |


### வீச கணிதம்

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 2 | 00 |
| இரண்டாம் பாகம் | ... | 2 | 00 |

### கேத்திர கணிதம்

| | | ரூ. | சத. |
|---|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 2 | 00 |
| இரண்டாம் பாகம் | ... | 2 | 75 |

*Distributors :*
**St. Joseph's Catholic Press,**
JAFFNA.



## இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனுல் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறுன். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனுகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறுன். ஏதாவது அபாயம் நேருவதானுல், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறுன். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்
### கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ் :

**69, இராணி வீதி — கொழும்பு.**

**Ceylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo**

## பாலர் பிரெசீடியம்

கொட்டாஞ்சேனை சந்த லூசியா ஆசனக்கோவில் மரியாயின் சேனையின் ஓர்கிளையாகிய மோட்சாரோபண இராக்கினியின் பாலர் பிரெசீடியம் மேட்டுத்தெரு அர்ச். அன்னம்மாள் பாடசாலையில் 9-5-53-இல் சங். சிஸ்றர் மேரி அன்ட்று அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. அன்றுதினம் 17 அங்கத்தினர் சமுகமாய் இருந்தனர். அவ்வேளை சங். சிஸ்றர் அவர்கள் பிரெசீடியத்தின் ஞானத்தலைவியாயும், திருமதி ஏ. சவிரிமுத்து தலைவியாயும், திருமதி எச். ஜே. பிலிப்பையா உபதலைவியாயும், புஷ்பம், யோஸபின் என்பவர்கள் முறையே காரியதரிசியாயும், தனதிகாரியாயும் தெரிவுசெய்யப்பட்டனர். உடனே ஒவ்வொருவரும் தத்தம்பதவிகளைக்கையேற்றுக்கூட்டத்தை நடத்தினர். அன்றுமுதல்இன்றுவரைநமது பாலர் பிரெசீடியம் வாரந்தோறும் வியாழக்கிழமை தவருது நடைபெற்றுவருகிறது. இதனுல் நமது பாடசாலை அதிகமான ஆன்ம நன்மைகளை அடைந்து வருகிறது.

ஏ. எஸ்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாய மாதாவின் மன்ருட்டால் நான் துவக்கிய முயற்சி விருத்தியடைந்து வருவதற்காக என்நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். மேலும் என் மன்ருட்டுகள் அனுகூலமாகும்படியும் சதாசகாய மாதாவை மன்ருடுகிறேன்.

ஓர்அடியான்

## விளம்பர விகிதம்

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் | ... | 2 | 00 |
| மரணஞாபகம் ஒரு அங். | ... | 2 | 00 |
| ஓடர் நிசி ( Odrer Nisi ) இரண்டுமுறைக்கு | ... | 10 | 00 |

முற்பணம் கட்டவேண்டும்

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
ச. வே. பாதுகாவலன்.

— இந்தியாவின் பழவகைகளுக்கெல்லாம் இராசாவென்று மாம்பழம் அறியப்படுகின்றது. இந்தியாவையே பிறப்பிடமாகக்கொண்ட மாமரம் அங்கே 20 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்திலே செய்கைபண்ணப்பட்டிருக்கிறது. கி. மு. 2000 வருடங்களுக்கு முன்னர்தொட்டே அங்கு இது உற்பத்திசெய்யப்பட்டு வந்திருக்கிறதாம்.

— இந்துசீனுவிலே கம்யூனிஸ்தர்கள் நடத்திவந்துள்ள யுத்தத்தாலே சேதமடைந்துள்ள வியெற்னும் நாட்டிலே வெடிகுண்டுகளாலும், பீரங்கிக் குண்டுகளாலும் 34 கத்தோலிக்க கோவில்கள் சேதமடைந்திருப்பதாக ஹோயாங்-வான்-டொவான் மேற்றிராணியார் தெரிவிக்கிருர். வியெற்னும் நாட்டிலுள்ள 15 மேற்றிராசனங்களிலும் 80 ஆயிரம்கத்தோலிக்கர்வரையில் இருக்கிருர்கள்.

# போலாந்தின் வேதவிசுவாசம்

டக்றர் மாறெக் ஸ்ரனிஸ்லோ கொரோவிக்ஸஅவர்கள் போலாந்திலே கிருககோநகர சர்வகலாசாலையில் முன்னர் ஓர் பேராசிரியராய் விளங்கியிருந்தவர். இவர் சமீபத்திலே ஐக்கியநாடுகளின் மகாசபைக் கூட்டத்துக்குப் போலாந்தஅரசின் பிரதிநிதிகள் கோஷ்டியினருள் ஒருவராய் நியூயோக்நகர் சென்றதும் அக்கோஷ்டியைக் கைவிட்டு அமெரிக்க ஐக்கிய தேசத்தில் அடைக்கலம்புகுந்துகொண்டார். இவர் அங்கு பிரசித்தமாகக கூறியிருப்பதாவது: "போலிக் குற்றச் சாட்டுகளின் பேரிலே மூனறுலட்சம்பேருக்கு மேற்பட்ட போலாந்தர்கள் அடிமைத் தொழில் முகாங்களில் இருந்துவருகின்றார்கள். போலிஷ்மக்களுள்ளே கூடியவீதமாக நூற்றுக்கு 6 அல்லது 7 விகிதமானோரே கம்யூனிஸ்தர்கள். சுதந்திர ஐரோப்பாவின் வானொலியாலும், "அமெரிக்காவின் குரல்" வானொலியாலும் போலாந்துக்கு அனுப்பப்படும் செய்திகளைப் போலிஷ்மக்கள் குதூகலத்துடன் கேட்கின்றார்கள். கம்யூனிஸ்த வானொலிச் செய்திகளுக்குச் செவிகொடுப்பார் மிகச்சிலரே. அங்கு திருச்சபையை அழித்து ஒழித்துவிடுமாறு கம்யூனிஸ்தஆட்சி சகலவிதமான சாதனங்களையும் கையாண்டுவரத்தக்கதாகத் திருச்சபையோ மிகப் பலமுடையதொன்றாய் — எனது போலிஷ் மக்களின் புகலிடமாய் விளங்குகின்றது. இப்போதுபோல அத்துணை பெருந்திரளான மக்கள் தினமும் கோவில்களுக்குப் போவதை என்சீவியகாலத்தில் நான் ஒருபோதுமே கண்டதில்லை. அதிகாலைமுதல் மாலை அதிகநேரம்வரையில் பகல்முழுவதும் கோவில்களில் திவ்விய பூசைகள் நிறைவேறுகின்றன. போலிஷ்மக்களில் நூற்றுக்கு 60 விகிதமானவர்கள் போஷணைக்குறைவால் வாடுகின்றார்கள். ஆனால், கம்யூனிஸ்தர்களின் தயவைப்பெற்றவர்களாய்ப் பணம் வைத்திருப்பாருக்கு ஏராளமான உணவு கிடைக்கிறது" என அவர்தெரிவிக்கின்றார்.

### மூன்று குருசகோதரர்

ஒல்லாந்திலே விற்றென்நகரிலுள்ள திருமீட்பர்சபைச் சந்நியாசஆச்சிரமத்தில் லெம்மென்ஸ் மேற்றிராணியாரால் சமீபத்திலே உடன்பிறந்த மூன்றுசகோதரர்கள் ஒருங்கே குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றார்கள். இவர்களில்இருவர் இரட்டைப்பிள்ளைகள். இவர்களின் சொந்தவிசாரணைப் பங்குக் கோவிலிலே மறுநாள் ஞாயிறன்று மூன்றுபுதிய குருசகோதரர்களிலும் மூத்தவரான சுவாமியார் இரட்டைப் பிள்ளைகளான தமதுகுருசகோதரர்இருவரும் துணைபுரிய நிறைவேற்றிய பாடற்பூசையில், 1943-ம் ஆண்டுமுதல் திருமீட்பர் சபைக் குரவராய்இருந்துவருகின்ற இவர்களின் மற்றோர் சகோதரர் பிரசங்கஞ்செய்தனர். இந்தநான்கு குருசகோதரர்களுமே தங்கள்பெற்றாருக்குள்ள நான்குபுதல்வருமாவர். திருமீட்பர் சபையிலேயே ஓர் குரவரான இவர்களின்மாமனார் அபிஷேக வைபவத்தின்போது சமூகமாயிருந்தார்.

### சிறைவாசஞ்செய்யும் குருமார்

உத்தேசமாய்ப் பார்க்குமிடத்து, போலிஷ்குருமாருள் நூற்றுக்குப் 10 விகிதமானோர் சிறைவைக்கப் பட்டிருக்கின்றனர்என்று ரோமாபுரியிலுள்ள (கம்யூனிஸ்ற் அல்லாத) போலிஷ் ஸ்தானீகராலய ஆலோசகரான வண. மெயிள்ரோவிக்ஸ்சுவாமியார் கூறுகின்றார். சாவதானமாக எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களை ஆதாரமாகக் கொண்டு பார்க்குமிடத்து, சிறைச்சாலைகளிலும், காவல் முகாங்களிலும் இருந்துவருகின்ற குருமாரின்தொகை எண்ணூற்றுக்கும், ஆயிரத்துக்குமிடையிலென்றும், ருஷியாவுக்கு நாடுகடத்தப்பட்ட அநேக போலிஷ்குருமார் இத்தொகையில் அடங்கமாட்டார்களென்றும் அவர்கூறுகின்றார். அதாவது போலாந்திலுள்ள ஒவ்வோர்பத்துக்குருமாருக்கும் ஒருவர் சிறைவைக்கப்பட்டிருக்கின்றார். குருமாரைக் கைதுசெய்வது ஏறக்குறைய எப்போதும் அந்தரங்கமாக நடைபெறுவதாலே சரியான தொகையைக் கண்டுகொள்வது கஷ்டமாகும்.

### கம்யூனிஸம் மனந்திருப்புகிறது

சீனாவிலே கம்யூனிஸம் கத்தோலிக்கரைஇம்சித்து நடத்திவரும் வேதகலாபனை அதிகரிப்பதற்குத் தக்கதாய்ச் சீனாவின் பக்கமாகவுள்ள ஹொங்கோங் தீவிலே திருச்சபையின்விருத்தியும் அதிகரித்துவருகின்றது. யுத்தத்துக்குமுன் அத்தீவில் 10 கத்தோலிக்க கோவில்களே இருந்தன. இன்று 28 கோவில்கள் இருக்கின்றன. இந்தக் கோவில்களில் ஒவ்வொன்றும், மற்றும் கன்னிகாமடங்களும், பிறகத்தோலிக்க ஸ்தாபனங்களும் மனந்திரும்புகிறவர்களுக்கு வேதத்தைப்படிப்பிக்கும் ஊக்கமானநிலையங்களாய் விளங்குகின்றன. அதனால் ஞானஸ்நானங்கள் நூற்றுக்கணக்கிலே நடைபெறுகின்றன. சிலவேளைகளிலே பெருந்திருநாட்களில் ஆயிரக்கணக்கிலும் நடக்கின்றன. தற்போது ஹொங்கோங்கில்வசிக்கும் அநேகமக்கள் செஞ்சேனைசீனாவினூடாகப் படையெடுத்து வாரியபோது அங்கு வசித்தவர்கள். இவர்களும், சீனாவிலே தங்கள்உறவினரும், சிநேகிதரும் உள்ளாயிருக்கும் பரிதாபகரமான கஷ்டநிலைமையைப்பற்றிக் கேள்விப்படுகிற மற்றவர்களும் கம்யூனிஸம் ஓர்தீமையான காரியம்என்றும், அதற்கு ஒரேயொரு மாற்றுமருந்து கத்தோலிக்க திருச்சபையின் போதனைகளே என்றும் ஒப்புக்கொண்டு மனந்திரும்புகின்றார்கள்.

# அர்ச். தோமையாரின் கல்லறை

சென்னைக்குச் சமீபமாய் இருந்துவருகின்ற அப்போஸ்தலரான அர்ச். தோமையாரின் கல்லறைத் திருசேத்திரத்தை ஓர்பிரசித்த யாத்திரைத்தலம் ஆக்குவதற்கான திட்டங்களைச் சென்னை—மைலாப்பூர் அதிமேற்றிராணியாரான மத்தியாஸ் ஆண்டவர் செய்துவருகின்றார். அப்போஸ்தலரின் திருமேனியானது ஓர்காலம் அடக்கஞ்செய்யப் பட்டிருந்த சேத்திரகுன்றுவரையிலே பெரிய வீதி ஒன்று திறக்கவும், அவர் வேதசாட்சியான இடத்திலே கல்வாரி ஒன்று அமைக்கவும்பட விருக்கின்றன. நிற்க, இத்தாலியிலே ஓர்தோனநகர் ஆசனக்கோவிலில் நெடுங்காலமாகப் பூச்சியமாய்ப்பேணி வைக்கப்பெற்றிருந்த அப்போஸ்தலரான அர்ச். தோமையாரின் திருப்பண்டங்களையுங்கொண்டு கருதில்மார் திருச்சங்க தலைவரான கருதினல் திசறன்ற் ஆண்டவர் வருகிறகார்த்திகைமாதம் 11-ந்திகதி ஏர்ணாக்குளம் வந்துசேரவிருக்கின்றார்.

### அவர்களின் முகங்கள்

ஆஸ்திரியாவிலே பிரித்தானியஆதிக்கத்திலுள்ள பகுதியைச்சேர்ந்த கிரூஸ்நகர் விசாரணைப்பங்குக் கோவிலிலே இருவருடங்களின்முன் சித்திரவேலைப்பாடமைந்த கண்ணாடியன்னல்ஒன்று ஸ்தாபிக்கப்படலாயிற்று. ஆயினும் அதிலே ஹிற்லரினதும், முசோலினியினதும் முகங்கள் தோற்றம் அளிப்பதை அவ்விசாரணைப்பங்குக் கிறீஸ்தவர்கள் இப்போதுதான் அவதானித்தார்கள். ஆண்டவர் சிலுவையில்அறையுண்டபாவனையைச் சித்திரித்துக்காட்டும் அந்தக்கண்ணாடியிலே சனக்கூட்டத்தின் மத்தியில் ஹிற்லரும், முசோலினியும நிற்கின்றார்கள். பிரபலஜேர்மனிய சைத்திரிகரான பேராசிரியர் அல்பேட் பேர்க்கின் அவர்களே இந்தச்சித்திரக் கண்ணாடியன்னலைச் செய்துமுடித்தார். "அக்காலத்தில்நடைபெற்ற வேதகலாபனைக்கும், இக்காலத்தில் நடைபெற்றுவரும் வேதகலாபனைக்கும்இடையிலுள்ள ஒப்புமையைக் காண்பிக்குமாறே" தாம் அவர்களின்முகங்களை அதில்வைத்ததாக அவர்கூறுகின்றார். அதிலே ஹிற்லர் அணிந்திருக்கும் மேலங்கயில் நாஸியசுவாஸ்திக்க சின்னம் காணப்படுகின்றது. ஹிற்லரும், முசோலினியும் அறையுண்ட கிறீஸ்துநாதரை ஊன்றிநோக்கியவண்ணம் நிற்கின்றனர். கிரூஸ்நகர் கத்தோலிக்க அதிகாரிகள் அந்தயன்னலை அந்தப்படியேஇருக்கவிடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

### வேதசாட்சிகளின் குருமடம்

போர்த்துககால்தேச லிஸ்பன்நகரில் "கோர்போ சான்ரோ"எனும் சரித்திரபூர்வமான சந்நியாச ஆச்சிரமம் ஒன்று இருக்கின்றது. இது அயர்லாந்துக்கெனக் குருப்பிரசாதிகளைப் பயிற்றியெடுப்பதற்காக 1632-ம் ஆண்டு அடியிடப்பட்டது. அயர்லாந்திலே கத்தோலிக்க மக்கள் கடூரமாக இம்சிக்கப்பட்டகாலத்திலே இந்தஆச்சிரமத்திற்பயின்ற பெருந்தொகையானகுருமார் அஙகு வேதத்திற்காக உயிர்துறந்தார்கள். அதனால் இந்தஆச்சிரமம் "வேதசாட்சிகளின் குருமடம்" என அறியப்படலாயிற்று. அங்ஙனமாக ஓர்ஐரிஷ்காரரான 84 வயசுடைய வண. போல் சுலிவான் சுவாமியார் கத்தோலிக்க அச்சகம்ஒன்றை இந்தஆச்சிரமத்தில் அடியிட்டுக் கடந்த 58வருடகாலமாக நடத்திவருகின்றார். இத்தனை வருடங்களிலும் போர்த்துக்கால் 20 அரசியற்புரட்சிகளையும், 40 முறை அரசாங்கமாற்றங்களையும் கண்டிருக்கிறது. ஆனால், சுவாமியாரோ தமதுஅச்சகத்தைத் தொடர்ந்து நடத்திவருகின்றார். அதிலிருந்துஆறு மாதாந்தசஞ்சிகைகள் வெளிவருகின்றன. இலட்சக்கணக்கான புத்தகங்களும், துண்டுப்புத்தகங்கள், பிரசுரங்களும் அதிலிருந்து இதுவரை வெளிவந்திருக்கின்றன. சுவாமியாரும் ஆங்கில, போர்த்துக்கேய பாஷைகளில் சிறந்தஎழுத்தாளர்.

### அந்த ஐந்து பிள்ளைகள்

பெலஜியதேசத்திலே இற்றைக்கு 20 வருடங்களின்முன் தேவதாயார் ஐந்துபிள்ளைகளுக்குக் காட்சியளித்ததலமாகிய போறாய்ங் திருசேத்திரத்திற்குச் சிலதினங்களின்முன் ஆங்கிலேயகத்தோலிக்கரின் அதிகாரபூர்வமான முதல்யாத்திரை நடந்தேறியது. அப்போது அவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்தஐந்துபிள்ளைகளிலும் ஓர் பெண்மணியான அன்ட்றீ டெஷாம்றே என்பவள் அப்பதியில் வைத்துநடத்திவரும் ஓர்சிறியசாய்ப்பிலே சில சாமான்கள் வாங்கிக்கொண்டார்கள். காட்சிபெற்ற ஏனைய பிள்ளைகளைப்போலவே அன்ட்றீயும் விவாகஞ்செய்து ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாயிருக்கின்றாள். இவளின்சகோதரியான ஜில்பேட் டெஷாம்றே என்பவள் இருபிள்ளைகளுக்குத் தாயாய்ப் பிறசெல்ஸ்நகரில் வசித்துவருகின்றாள். பெர்னண்டோ வொய்சின் என்பவளும் அன்ட்றீயைப்போல் போறாய்ங்கிலேயே இன்னமும் சஞ்சரித்துவருகின்றாள். ஆயினும், தனக்குள்ள ஐந்துபிள்ளைகளையுமிட்டு அன்ட்றீயைப் போல ஒவ்வோர்இரவிலும் ஒழுங்காகச்சென்று திருசேத்திரத்தில் செபமாலை சொல்ல முடியாதிருக்கின்றாள். ஜில்பேட் வொய்சின்என்ற மறறோர் பெண்மணி இராணுவப் பொலிஸ் ஒருவரை விவாகஞ்செய்து இருபிள்ளைகளுடன் நாமூர்நகரில் வசிக்கின்றாள். காட்சிபெற்றஐவரிலும் ஒரேயொருபையனை அல்பேட் வொய்சின் தற்போது பெல்ஜியகொங்கோவில் ஆசிரியத்தொண்டாற்றி ஓர்ஆண்குழந்தைக்குத் தந்தையாய்இருக்கின்றார்.

## 1954-ம் ஆண்டுக்கான இலங்கைச் சத்தியவேத பஞ்சாங்கம்

இப்போது தயாரரயிருக்கிறது. ஓடோ (Ordo) வைச் சரிவரப் பின்பற்றுகிறது. தங்களுக்கு எவ்வளவு தேவை என்பதைத் தெரிவிக்குமாறு வண. குருப்பிரசாதிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**Marager,**
St. Joseph's Catholic Press,
JAFFNA.


## திருநாள் அட்டவணை

ஐப்பசி மாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 30 | அ. மார்செல்லியார், வே. | (ப) |
| சனி | 31 | அ. குயக்தீனப்பர், வே. | (ஊ) |

கார்த்திகை மாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| ஞா | 1 | இஸ்பிரீத்து ஆகமனத். பின் 23-ம் ஞாயிறு — சகல அர்ச்சிய சிஷ்டர்களின் திருநாள் | (வெ) |
| திங் | 2 | உத்தரிக்கிற ஆத்துமாக்களின் திருநாள் | (க) |
| செ | 3 | அ. மலக்கியாஸ், ம. | (வெ) |
| புத | 4 | அ. சாள்ஸ் பொரோமையார். மே. | (வெ) |
| வி | 5 | அ. கலாசியோன் | (சி) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1953-ம் ஆண்டு
ஐப்பசி மாதம் 29-ந் திகதி


## காத்திருக்கும் மாதம்

ஆம், நாம் காத்திருக்கும் மாதம, அந்தக்கார்த்திகைமாதம். எதற்காக? நமது தாய்தந்தையராய், உற்றார் உறவினராய், உபகாரிகள்சிநேகிதராய், உடன்பிறந்த சகோதரங்களாய், மற்றும் கிறீஸ்துநாதரிலே நமது ஞானச்சகோதரராய் உலகில சீவித்திருந்து, மரணமடைந்து, உத்தரிக்கிறஸ்தலத்தில உக்கிரவேதனைப்படுகிறவர்களை — வேதனைப்படுகிற ஆத்துமாககளை விசேஷ விதமாய் நினைவுகூர்ந்து, அவர்கள் மேல் விசேஷ அனுதாபம காண்பித்து, அவர்களுக்கு விசேஷ விதமாக ஆறுதல்புரிவதற்காகவே. ஏனெனில், ஆத்துமாக்களின்மாதம அதுவாகும். தங்களுக்கு அருமையாய், பெருமையாய், ஆபத்திற்சகாயமாய், ஆருயிர்த்துணையாய், ஆறுதலாய், உலகிலவாழந்திருந்து மரணத்திரையில மறைந்துபோனவர்களை நினைக்குந்தோறும கார்த்திகைவரட்டும், பார்த்துக்கொள்வோமென்று காலத்தவணைபோட்டுக காத்திருந்தாரெல்லாம் தங்கள்கடமையை — நன்றிக்கடனை உணர்ந்து, அவர்களின ஆன்ம இளைப்பாற்றிக்காக அதிகமான திவ்வியபூசைகள் செய்விக்கவும், அதிகமதிகமாகச் செப, தப, தானதர்மங்கள் செய்யவும் எதிர்பார்த்திருந்த ஆத்துமாககளின்மாதம அண்மியது. கார்த்திகைமாதம் நமக்கு ஓர் காத்திரமான சந்தர்ப்பத்தை அளிக்குமமாதம். உத்தரிககிறஸ்தலத்தில் உபத்திரவப படுகிறவர்கள்யார்? நமமைப்போல ஓர் காலம் இவ்வுலகில் சீவித்திருந்தவர்களே. அதனுல்அவர்களுக்கு நாம ஆறுதல் உணடுபண்ணவும், அதுகாரணமாகப் பிறகு நாமே ஆறுதல்கண்டுகொள்ளவும் அஃது ஓர்சந்தர்ப்பம் அளிக்கிறதென்றால் மிகையாகுமா? நாம் இப்போது அவர்களை நினைவுகூர்ந்தால் பிறகுநாமும் நினைவுகூரப்படுவோம். மறந்தாலோ நாமும்அப்போது மறக்கப்படுவோம். நாம்அளந்தஅளவாலேயே நமககும் அளக்கப்படும். ஆதலால்நாம் உயிர்வாழும்காலத்திலே அவர்களுக்குச் செய்வதெல்லாம் பிறகு நாம் ஆறுதலைக் கண்டுகொள்வதற்கான ஓர்அச்சாரமாகும். "உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்களை மீட்டு, அவர்களை மோட்சஇராச்சியத்தில் சேர்ப்பிப்பதானது எல்லாப் புண்ணியங்களிலும் மேலான புண்ணியமாகும்; மரித்தவர்களுக்காக நாம்செபிக்கும்போது, தயாளத்தின் சகல கட்டளைகளையும் நாம் பூர்த்தி செய்பவர்களாகிறோம்" என்று அர்ச். பிரான்சீஸ் சவேரியார் கூறுகின்றார். "உத்தரிக்கிறஸ்தலவேதனை நித்தியமானதாய் இல்லாவிடினும் அது மிகவும் கொடுமையானது; பூமியில் அனுபவிக்கும் சகலவேதனைகளிலும் அதிகம உக்கிரமானது; வேதசாட்சிகள் அனுபவித்த வேதனைகளிலும் மிகக்கொடியது' என்கிறார் அர்ச். அகுஸ்தீனர். ஆகவே, நமக்கு அருளப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கார்த்திகைமாதத்திலே நம்மாலானமட்டும் செபதபஞ்செய்தும், தானதருமஞ்செய்தும, திவ்வியபூசைகள்செய்வித்தும், பூசைகண்டு ஒப்புக்கொடுத்தும, பிறநற்கிரிகைகளைப் புரிந்தும் திரளான ஆத்துமாக்களை மோட்சபேரின்ப பாக்கியத்தில் சேர்க்கப் பிரயாசப்படுவோம். அவர்களுக்காக நாம் செய்யும் அற்பதியாகந்தானும் அவம் போகமாட்டாதென்க.

### இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்
## 23-ம் ஞாயிறு
### சகல அர்ச்சியசிஷ்டர்கள் திருநாள்

#### சுவிசேஷ வாசிப்பு

(மத். 5: 1—12)

அர்ச். மத்தேயு எழுதிவைத்தபடி பரிசுதத சுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக் காலத்திலே யேசுநாதர் சனக்கூட்டங்களைக்கண்டு ஒரு மலையின் மீதேறி உட்கார்ந்த மாத்திரத்தில் அவருடைய சீஷர்கள் அவரண்டையில் அணுக, அவர் தமது திருவாய் மலர்ந்து அவர்களுக்குப் போதித்தருளின தாவது: மனத்தரித்திரர் பாக்கியவான்கள்; ஏனெனில், மோட்சஇராச்சியம் அவர்களுடையது. சாந்தகுண முள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். அழுகிறவர்கள் பாக்கியவான்கள; ஏனெனில், அவர்கள் ஆறுதலடைவார்கள். நீதியின் பேரில் பசிதாக முள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் திருப்தியடைவார்கள். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் இரக்கமடைவார்கள். தூய இருதயமுள்ளவர்கள் பாக்கிவான்கள்; ஏனெனில், அவர்கள், சருவேசுரனைத் தரிசிப்பார்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் தேவமக்கள் எனப்படுவார்கள். நீதியினிமித்தம் உபத்திரப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், மோட்சஇராச்சியம் அவர்களுடையது. என்னைப்பற்றி மனிதர் உங்களைச் சபித்துத் துன்பப்படுத்தி உங்கள்மேல் சகல தின்மையையும் அபாண்டமாய்ச் சொல்லும் போது நீங்கள் பாக்கியவான்கள்; அப்போது அகமகிழ்ந்து அக்களியுங்கள். ஏனெனில், பரலோகத்தில் உஙகள் சம்பாவனை ஏராளமாயிருக்கிறது என்று திருவுளம்பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.



## சதாசகாயமாதா கோணம்

### மோட்சத்துக்கு நேர்வழி
### 15 இலகுவான பாடங்கள்

தாய்மாரே சிறந்தஉபாத்திமார் என்பதற்கு ஓருதடையுமில்லை. சந்தேகமுமில்லை. அதிககடினமான பாடங்களைத் தாய்மார் மிகஇலேசானவைகளாகச் செய்யும் சக்திவாய்ந்தவர்கள். மிகவும்எளிதான பாஷையில் சீவியத்தின் பாரிய, காத்திரமிக்க விஷயங்களையெல்லாம் உருசிகரமும், கவர்சசியும, சந்தோஷமும் பயக்குமவகையில் பயிற்றும ஆற்றல்படைத்தவர்கள் தாய்மார். அவர்கள் அதிகம்படிப்பிப்பதில்லைமெய்தான். விடாப்பூட்டாய்த் திரும்பத்திரும்பச் சொல்வதினுலும, புதுப்புது வித்தியாப்பியாசத்தினுலும் நாம சீவிக்கவேண்டிய வழியைபபற்றியும, நம நடத்தையைப்பற்றியும், சன்மார்க்க போதகத்தைப் பற்றியும் மிகச்சிறந்த முறையிற் கற்றுக்கொடுக்கும் ஆற்றல் உடையோர் அன்னையர்என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. இந்தஉண்மைக்குச்சான்று நாம் எம்சொந்த அனுபவத்தில் கண்டுள்ளோம். ஒருபிள்ளையின் குணம், நடை, போக்குவாக்கு நல்லதெனக் காணுமபோது நாம் அப்பிள்ளையின் தாயை மெசசுவதுஇயல்பு. பிள்ளையின்நடத்தை உசிதமற்றதாயின் அப்பழி பொதுவாகத் தாயையேசூழுகின்றது. வீட்டின் இராக்கினியென்றமட்டில் பிள்ளைகளைப்பயிற்றுவது தாயின் உத்தரவாதமாகும்.

இம்மேரையாகவே நமதுதாயாராம் மரியாயும், வாழ்க்கையின் அதிகடினமான பாடங்களை—சிக்கலானகற்பனைகளை மிக்கஇலகுவானமுறையில் படிப்பிக்கிறு. விடாப்பிடியாய், திரும்பத் திரும்பச் சொல்வதினுலும், புதுமுறைகளைக் கையாடுவதினுலும், வாழ்க்கையின் காத்திரமிக்க, பாரிய, இலட்சியங்களையெல்லாம் மனோகரமாகவும், இனிமையாகவும், நமக்குப் பயிற்றுகிறு. மோட்ச இராக்கினி என்றமட்டிலும், நம்எல்லோரின் தாயார்என்றமட்டிலும் நாம் சீவிக்கவேண்டிய, நடக்கவேண்டிய வழியை நமக்குப்படிப்பிக்கும் கடமையைத் தமதுபேரில் சுமந்துகொண்டா. இதை எவ்விதம் செய்துமுடிக்கிறு? அதிகம் படிப்பிப்பதினுல் அலல. அதிஉகப்பானவையும், இலேசானவையுமான 15 இலகுவான பாடங்கள்மூலம், அதாவது திருச்செபமாலைமூலம் இதை நமக்குக் கற்பித்துக் கொடுக்கிறு.

நமது இராட்சணியத்துக்குத் தேவையான 15 இலதுவான பாடங்கள்எவையெனில், 15 பரமஇரகசியங்களாம். மொத்தத்தில் நமதுவிசுவாசம் திருச்செபமாலையென்று சொல்லலாம். நாம் விசுவசிப்பதெல்லாம், நாம் நம்பியிருப்பதெல்லாம், நாம் நேசிப்பதெல்லாம் திருச்செபமாலையில் அடங்கியிருக்கிறது. நமதுவிசுவாசம் இலேசானதுஅல்ல. நமது வாழ்க்கையில் அதிமுக்கியத்துவம் வகிப்பதுஅது. மரியாய் அதைநமக்கு இலேசானபாஷையிற் சொல்லிக்கொடுக்கிறு. இடைவிடாது, திரும்பத்திரும்பச் சொல்லுவதனுல், செபமாலை நமது திவ்விய இரட்சகரையும், அவருடைய திருத்தாயாரையும் எப்போதும் நமக்கு நினைவூட்டியவணணம் இருக்கிறது. அவர்களுடைய சந்தோஷங்கள், வியாகுலங்கள், மகிமைப்பிரதாபங்கள் நாம் செபமாலை ஓதும்போதெல்லாம் நம் மனக்கண்முன்னே காட்சி அளித்தவண்ணம் இருக்கின்றன. நாம செபமாலை ஓதும்போது இன்பத்திற்துனபம் என்பதன் உண்மைக்கருத்தை உணர்ந்துகொள்ளுகிறோம். சந்தோஷமாகப் பாடுபடுவதன் இரகசியத்தை அறிந்துகொள்ளுகிறோம். பாடின்றிப் பட்டமில்லையென்றும், துக்கமின்றிச் சந்தோஷமில்லையென்றும், நம்பிக்கையின்றி வெற்றியில்லையென்றும் இன்னோரன்ன சுகிர்தஉண்மைகளைக் கற்றுக்கொள்ளுகிறோம். இதுதான் எங்கள் விசுவாசம். இந்தவிசுவாசம் இல்லையோ நமக்கு இரட்சணியமுமில்லை. யேசுநாதசுவாமி தமது மகிமைப்பிரதாபத்தோடு மோட்சமடையமுன் அனுபவித்த கஸ்தி, வாதை, துன்பம் இம்மட்டு அம்மட்டென்று யார்தான் கிரகித்துக்கொள்ளக்கூடும்?

தேவமாதா இந்தஉண்மைகளைப் 15 இலகுவான பாடங்கள்மூலம் நமக்குப் படிப்பிக்கிறு. நாம் இவ்வுலகத்தில் சந்தோஷம் சந்தாபம்மூலம் மறுஉலக நித்திய பாக்கியத்தை அடைய வேண்டுமெனக் கற்பிக்கிறு. இந்தப் பாடங்களை நாம் திறம்படப் படித்துக்கொண்டால், நாம் போதியளவு செபமாலைகள் சொன்னுல், அவதானே கூறியுள்ளபடி, உலகயுத்தத்தைத் தடுக்கலாம்! ருஷியாவை மனந்திருப்பலாம், நாம் மோட்சகதி அடையலாம்!

## சுதேச வர்த்தமானம்

### முன்னுள் பிரதமரின் விடுமுறை

முன்னுள்பிரதமரான திரு. டட்லி சேனுநாயக அவர்கள் சுகவிடுமுறையிலே ஏயர் இந்தியா விமானத்தில் சென்ற வியாழக்கிழமை சென்னைக்குச் சென்றிருக்கிறர். அங்கே இவர் அடையாற்றிலுள்ள சேர் முத்தையாசெட்டியாரின் மனையில் அவரது விருந்தினராக இருந்துவருகிறர். அங்கு இரு மாதங்கள்வரையில் தங்கியிருந்துவிட்டுத் திரும்பியதும் தம்முடையதொகுதிக்காக உழைப்பதிலேயே தமது நேரத்தில் பெரும்பகுதியைத் தாம் செலவிடப்போவதாகவும், தாம் பாராளுமன்றத்தில் ஓர் வெறும்அங்கத்தவனுக இருப்பதிலேயே திருப்தியடையப்போவதாகவும் தெரிவித்துப் போயிருக்கின்றார். இவர் தந்தையாரான திரு. எஸ். சேனுநாயக அவாகளும், சேர் முத்தையாசெட்டியாரும் நெருங்கிய நண்பர்களாவர்.

### வெளிநாட்டு ஸ்தானிகர்கள்

பிறநாடுகளிலுள்ள இலங்கை ஸ்தானிகர்கள் தொகையைக் குறைப்பதற்குப் புதியபிரதமர் சேர் ஜோன்கொத்தலாவல அவர்கள் கருத்துக்கொண்டிருக்கிறார். தற்போதைய பணநிலைமையில் அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஸ்தானிகர்களையே கொண்டிருக்க வேண்டுமென்பது அவரின் கருத்தாகும். ஒவ்வோர்நாட்டிலும் தனித்தனி ஸ்தானிகர்களைக் கொண்டிருப்பதற்குப் பதில் பலநாடுகளுக்கு ஒருஸ்தானிகரைக் கொண்டிருப்பது சாத்தியமாகுமாவென்றும் அவர் ஆலோசிக்கவிருக்கின்றார். இந்தப்பிறநாட்டு ஸ்தானிகராலயங்களுக்கென்று இப்புதிய அரசிறைவரவுசெலவுத்திட்டத்திலே அரசாங்கம் 32,70,417 ரூபா விட்டிருக்கிறது.

### ஆயுர்வேத மருந்துச்சாலைகள்

கொழும்புநகரசபை அங்கரிலே பதினொரு இலவசஆயுர்வேத மருந்துச்சாலைகளை நடத்திவருகின்றது. இந்த மருந்துச்சாலைகளின் வைத்தியசேவை பூரணசித்தியை அளித்திருப்பதாலே அநகரசபை மேலும் விஸ்தரிப்பதுபற்றி ஆலோசித்துவருகிறது. இந்தப்பதினொரு மருந்துச்சாலைகளிலும் மாதந்தோறும் சாசரிவீதமாய் இருபதினாயிரம்பேர் வைத்தியசகாயம் பெற்றுவருகிறார்கள். அதனால், நகரசபை நடத்தும் இலவச ஆங்கிலமருந்துச்சாலைகளிலும், பெரியஆஸ்பத்திரியிலே வெளிநோயாளர்கள் பார்வையிடப்படும் மருந்துச்சாலைகளிலும், அங்குள்ள சுதேசவைத்தியசாலையிலும் சனநெருக்கம் குறைந்திருக்கின்றது. கொழும்புநகரசபை தனது இலவச ஆயுர்வேத மருந்துச்சாலைகளைக் கொண்டுநடத்துவதற்குப் பணமுதலாக 1லட்சத்து 80ஆயிரம் ரூபாவரையில் ஒதுக்கிவைக்கின்றது. ஆனால், தற்போது இந்தத்தொகை போதியதாயில்லை.

### மன்னார்ப் புதியதபாற்கந்தோர்

மன்னார்ப்பட்டினத்தின் மத்தியிலே ஒன்றரை லட்சம் ரூபாசெலவில் கட்டிமுடிக்கப்பெற்ற புதியதபாற்கந்தோர் திறக்கப்பட்டு அலுவல் நடைபெறத் தொடங்கியிருக்கிறது. அப்பட்டினத்திலுள்ள அரசாங்ககட்டடங்கள் யாவற்றிலும் இது மிகப்பெரியது. மேல்மாடியைக் கொண்டது. இந்த மேல்மாடி போஸ்ற்மாஸ்றரின் வாசஸ்தலமாகும். பழைய தபாற்கந்தோர் திருத்தப்பட்டு அதிலே தபாற்கந்தோரில் பணியாற்றுவோர் தங்குவார்கள்.

### புதியசிகிச்சை நிலையம்

மன்னார்ப்பட்டினசங்கம் பள்ளிமுனையிலே மூவாயிரம்ரூபாசெலவில் புதிய சிகிச்சைநிலையம் ஒன்றைக் கட்டத் தொடங்கியுள்ளது. இதற்குமுன் அங்கு ஓர்சிறுகட்டடமே சிகிச்சைநிலையமாகப் பாவிக்கப்பட்டுவந்தது. மன்னார்ப்பட்டினசங்கத்திலே பள்ளிமுனைப்பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. எம். டானியேல் குரூச் அவர்கள் எடுத்துக்கொண்டமுயற்சியாலேயே இது கைகூடலாயிற்று.

### காகக் கூட்டில் இருந்தது

சிலாபத்திலே சாமான்கள் கொண்டு திரிந்து விற்குமொருவன் சென்றவெள்ளிக்கிழமை ஓர்கிராமச் சந்தையில் சாமான்கள் விற்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பியபோது, வழியிலே தனது காத்தையையும், சாமான்களையும் விட்டுத் தேநீர் குடிக்கத் தெருவின்பக்கமாயிருந்த ஓர்கடைக்குள் சென்றான். அவன் கடையில் நிற்கும்போது காகம் ஒன்று காத்தைக்குள் பறந்துசென்று சாமான்களைக் கொத்திக்கொண்டிருந்தது. அவன் தேநீர்குடித்துவிட்டுக் கடைக்காரனுக்குக் கொடுக்கும்படி காசுஎடுக்கக் காத்தைக்குச் சென்றபோது அவன்உழைத்த பணத்தை அடக்கிய பார்சலைக் காணவில்லை. அப்போது பக்கத்தில்நின்ற மாமொன்றிலே காகம் பார்சலைவைத்துக் கொத்திக்கொண்டிருந்தது. உடனே அவனும் மற்றவர்களுமாகக் கல்லால் எறிந்து அதைக்கலைக்கவே, அது மாத்துக்கு மரம் கொப்புக்குக்கொப்பு பறந்து, கடைசியாகப் பார்சலுடன் ஓர்தென்னைமாவட்டினுள் மறைந்துவிட்டது. அப்போது மழையும் பெய்துகொண்டிருந்தது. இருட்டவும் தொடங்கியது. அவன் வீட்டுக்குத்திரும்பினான். மறுநாட்காலை அவன் திரும்பவும்வந்து சில மாங்களில் ஏறிப்பார்த்தபோது, அவற்றுள்ஒன்றின் வட்டிலே காகக்கூடொன்றும், அதனுள் மறைத்துவைக்கப்பட்டிருந்த காசுப்பார்சலும் இருக்கக்கண்டான்.

### பந்தையம்வென்ற விமானி

இம்மாதஆரம்பத்திலே லண்டன்நகருக்கும், நியூசீலாந்துக்குமிடையில் நடைபெற்ற ஆகாயப்பந்தையத்தில் போக்குவரத்துப் பிரயாண விமானங்களின் தீவிரவேகத்தில் முதல்வெற்றிபெற்றவர் கப்ரின் எச். ஏ. ஏ. கூப்பர் என்பவரே. இவர்செலுத்திய விமானம் கே. எல். எம். என்ற உலாந்த பிரயாணவிமானக் கம்பெனியைச் சேர்ந்ததாகும். இந்தவிமானம் 18,000 ருத்தல் சாமான்களையும், 64 பிரயாணிகளையும், 12 விமானப் பணியாளரையும் ஏற்றிக்கொண்டு பந்தையத்தில் ஈடுபட்டு மணித்தியாலம் சாசரியாய் 285 மைல்வீதம் பறந்து சென்றது. இந்தவிமானம் லண்டனிலிருந்து இந்தோனீஷியாவரையிலுள்ள தூரத்தை 30 மணி 60 நிமிஷத்தில் பறந்தது. வழமையிலே இந்தக் கம்பெனி விமானங்கள் அவ்வளவு தூரத்தையும் பறந்துசெல்ல 60 மணித்தியாலம் செல்லும்.

## சந்தானுள் நாயகியின் புதியஆலயம்

வவுனியாவிலிருந்து மன்னாருக்குப் போகும்தெருவிலே, அங்கிருந்து ஒன்பதுமைல் தூரத்திலுள்ள பூவாசங்குளம்என்ற கிராமத்தில் வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்களின் விடாமுயற்சியால் சந்தானுள்நாயகியின் சிற்றாலயம்ஒன்று கட்டப்பெற்றுச் சென்ற 24-ந் திகதி சனிக்கிழமை மாலை ஆசீர்வதித்துத் தேவஆராதனைக்குத் திறந்து வைக்கப்படலாயிற்று. அத்தருணம்வவுனியா, செட்டிகுளம் முதலாம்இடங்களிலிருந்து பன்னூற்றுக்கணக்கான விசுவாசிகள் வந்து கூடியிருந்தார்கள். ஆலயமும், சுற்றாடலும் பலவிதசோடினைகளாலும், மின்சாரதீபங்களாலும் அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருந்தன. மருதமடுத்திருப்பதிப் பரிபாலனரான வண. ஜே. புரூகான் சுவாமியவர்கள் சந்தானுள்நாயகியின் சுரூபத்தையும், ஆலயத்தையும், அதன் சுற்றாடலையும் ஆசீர்வதிக்கும்திருச்சடங்குகளை நிறைவேற்றினர். கிறீஸ்துதேவஇராசாவின் இராசசியம் பரம்பவும், விசுவாசிகள் ஆத்துமசரீரநன்மைகள்பெற்றுத்தேவநேசத்தில் வளர்ந்து பரலோகபாதையில் நடந்துசெல்லவும் ஆலயம் எத்துணை அவசியமென்றும், இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்குமுன் இதே இடத்தில் அர்ச். அன்னம்மாள்பேரால ஒரு சிற்றாலயம் இருந்ததென்றும், காலகதியில் அதுமறைந்துபோகவே மீண்டும் அதேஇடத்தில் இந்தஅன்னையின்பெயரால் ஓர்புதிய ஆலயத்தைக் காணப் பாக்கியம்பெற்றோமென்றும் வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்கள் பத்திஅருட்சிக்குரிய ஓர் பிரசங்கஞ்செய்தனர். பின்னர் வவுனியாப் பகுதிக்கட்டளைக்குரவர் வண. சீ. ஓம்ளோ சுவாமியவர்களும், வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்களும் துணைபுரிய, மருதமடுத்திருப்பதிப்பரிபாலன சுவாமியாரே மாலைஆராதனை பாடிக் கிறீஸ்துதேவஇராசாவின் திருநாளாகிய மறுநாள் 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை புதியஆலயத்தில் முதற்பூசைப்பலியையும் ஒப்புக்கொடுத்தார்.

## தேம்பாவணியும் செபமாலையும்

### களிகூர்ந்தகாரணிக்கம்

**2-ம் காரணிக்கம் — 2-ம் பிரியதத்தம்**

#### 12. சூசையப்பரின் அனுமதிபெறுதல்

சூரியனை அணியாகக் கொண்ட மேகம் ஒளிசெய்வதுபோலும், நறுந்தேனைச் சூலாகக்கொண்ட மலர் நன்மணம் வீசுவதுபோலும் ஆண்டவனைச் சூலாகத் தரித்த அமலோற்பவ கன்னிகையானவள் தாயும், சேயுமாகிய எலிசபெத் அம்மாளுக்கும், அவள் கர்ப்பந் தாங்கியிருக்கும் சிசுவுக்கும் அருள் பாலிப்பதற்காக எப்றோனிலிருக்கும் தன்மைத்துனியின் நிவாசத்திற்குச்செல்ல எண்ணினள் அன்றோ! அதனுல் அதற்குவேண்டிய காரியங்களைச்செய்ய முற்பட்டாள்.

கபிரியேற்சம்மனசானவர் தூதாக வந்து தனக்குத் தெரிவித்தசெய்தியை அவள் எவரிடமும் தெரிவிக்கவில்லை. அந்தரங்கமாகவே அதை வைத்துக் காப்பாற்ற எண்ணினள்.

> "நிறைபடச் சிறப்பொடு
> நிமலன் செய்யருள்
> மறைபடல் தகவென
> மனத்தில் எண்ணலோ(டு)
> அறைபடத் திருவுளம்
> அறிந்திலா மையாற்
> பொறைபடத் துறந்துயர்
> புகன்று தீர்க்கிலாள்"
> (ஐ. தோ. ப. 80)

என்று முனிவர் கூறுவதுபோல, அதாவது—பரிசுத்தரானகடவுள் ஒருவர்மேல் விசேஷமாய்ப் பூரணமாகச் (நிறைபட)செய்த கிருபையைப் பிறர் அறியாமல் தனக்குள்ளே மறைத்து வைப்பதுவே (மறைபடல்) நல்லதென்று (தகவு என) கன்னித்தாய் தனது உள்ளத்தில் நினைத்திருந்தனுலும், தன்னிடத்துத் தேவகர்ப்பம் வந்த அரியமுறைமையை வெளிப்படுத்த(அறைபட) கடவுளினுடைய திருச்சித்தத்தைக் கேட்டுஅறியாமையாலும் அத்தேவகர்ப்பம் வந்தமுறைமையை விபரித்துச்சொல்லி (புகன்று) தனது திருப்பத்தாவான சூசைமாமுனிவன் அடைந்த பாரமான (பொறைபட) பெருந்துன்பத்தை நீக்காதவளாயினள். இவ்வாறாக இரட்சகரின் திருஅவதார பரமஇரகசியத்தைப் பெருமையையும், புகழ்ச்சியையும் விரும்பாத அந்நங்கை எவரும் அறியாத வகையாய் இரகசியமாகத் தனக்குள்ளே வைத்திருந்தாள்.

அன்று அவள் தேவசுதனைக் கர்ப்பந்தாங்கிய நாலாம் நாளாகும். ஆகவே அத்தினங்களை அவள் எத்துணை பக்திப் பரவசத்துடன் கழித்திருப்பாள் என்று ஊகித்துச் சொல்லவும் வேண்டுமா? பல்லாயிரம் வருடங்களாக உலகமானது ஆவலோடு எதிர்நோக்கியிருந்த இரட்சகரே அவள் திருவயிற்றில் எழுந்தருளியிருப்பாரானுல் அவள் அடைந்தஆனந்தத்திற்கும், ஆச்சரியத்திற்கும் அளவுண்டாமோ? தன்னில் தானே ஒன்றுமில்லாத எளிமைமிகுந்த தனக்குச் சர்வேசுரன் செய்தருளிய மகிமை பெருமைகளை எண்ணிஎண்ணி அல்லும்பகலும் நன்றிதெரிவித்திருப்பாள் அன்றோ! எனவே, அவள் தனிமையையும், பூரண அமைதியையும் விரும்பியிருந்தகாலம் அதுவாயிருக்கும் அல்லவா?

அந்தச் சமயத்திலே அவள் தன் சிற்றில்லத்தில் அமைதியாகத் தங்கியிருக்கும்வேளை தேவதூதன் தன் மைத்துனியைப் பற்றிக் கூறியபோது, தான் என்னசெய்யவேண்டும் என்பதையும் அவர் குறிப்பாய்க் காட்டினாரென்பதை உணர்ந்திருந்தாள். அதுவுமன்றிக் காட்சியிற்கண்ட தேவஏவுதலையும் அவளாற் புறக்கணிக்க முடியவில்லை.

மரியாள் சுயநலத்தை எப்போதாவது விரும்பினவளல்ல. அவளுக்குச் சொந்தவிருப்பு, வெறுப்புகள் இருக்கவில்லை. தேவசித்தமே அவள் பாக்கியமாயிருந்தது. ஆகவே, தனக்குக் கிடைத்த தேவஏவுதலுக்கு உடனே கீழ்ப்படிந்தாள். அதுவுமன்றித்தாழ்ச்சியையே போணியாய்ப்பூண்ட அம்மாதரசி பிறருக்குத் தொண்டுசெய்வதை ஓர் இழிவான காரியமாகக் கருதினளல்ல. பரோபகார சிந்தையுடன் ஒருவர்க்கொருவர் உதவியாயிருத்தல், அதுவும் ஒருவர்க்கொரு துன்பம்வந்தநேரத்தில் உதவிசெய்தல் அகத்தியம் என்றெண்ணி எப்படியாவது இதுபற்றித் தன்பத்தாவிடம் தெரிவித்து அவருடைய அனுமதியைப்பெறவிரும்பினள்.

அங்ஙனமாக எலிசபெத்தம்மாள் மகவைப்பெறுங்காலம் கடந்து மூப்பான பிராயத்தில் கடவுளின் அருளால் அற்புதமாகக் கர்ப்பம்தரித்த வரலாற்றைச் சூசையப்பருக்கு எடுத்துக்கூறி, அவளைச்சென்றுதரிசித்து அவளுக்கு வேண்டிய தொண்டுகள்செய்துவர உத்தரவு தரும்படி அவரைவேண்டுகின்றாள்.

பண்டிதர், C. செல்வரத்தினம்

> "ஓர்ந்தவை அறத்தின் ஆட்சிக்(கு)
> உரித்துணை அவற்கும் கூற……"

"எப்றோனுக்குச் செல்லுதல்வேண்டும்; தன்பந்துவைத் தரிசிக்கவேண்டும்; அவளுக்குஉதவியாக இருத்தல்வேண்டும்" என்றெல்லாம் மரியாள் எண்ணியிருந்தாள் அல்லவா? அங்ஙனம் நினைத்தவற்றை நல்லறமுயற்சிக்கு (ஆட்சிக்கு) உரியதுணைவனுகிய சூசையப்பருக்கு எடுத்துச்சொல்ல,

> "……தேர்ந்தவை உயர்ந்த கேள்வி
> செறிந்தருள் புலமை யோனும்
> கூர்ந்தவை இமிழில் கேட்டு……"

கல்விச்செல்வம், கேள்விச்செல்வம், அருட்செல்வமாகிய முச்செல்வங்களையுமுடைய சூசையப்பரும் மரியாள் சொன்னவற்றை மிகவும் இனிதாகக் (இமிழில்)கேட்டு,

> "……குணம் இது என்று……"

போதல் நல்லது என்று சொல்ல

> "……………… …இருவர் வானத்(து)
> ஆர்ந்தவை சூழ நீண்ட அதர்கடந்(து)
> ஏகல் உற்றார்"


வானோர்சபையாகிய நிறைந்த சம்மனசுகளின் கூட்டமானது அவ்விருவரையும் சூழ்ந்துவர நெடுவழி கடந்து போகத் தொடங்கினர்.

> "ஓர்ந்தவை அறத்தின் ஆட்சிக்(கு)
> உரித்துணை அவற்கும் கூறத்
> தேர்ந்தவை உயர்ந்த கேள்வி
> செறிந்தருள் புலமை யோனும்
> கூர்ந்தவை இமிழிற் கேட்டுக்
> குணமிதென்(று) இருவர் வானத்(து)
> ஆர்ந்தவை சூழ நீண்ட
> அதர்கடந்(து) ஏகல் உற்றார்"

---

யாழ்ப்பாணப்பகுதியிலிருந்து வவுனியா மார்க்கமாக மருதமடுத்திருப்பதிக்கு யாத்திரைசெய்கிறவர்கள் வழியில் தேவஅன்னையின் அன்னையாகிய அர்ச். அன்னம்மாளையும் சந்தித்து அவவின் ஆசியைப்பெற்று இளைப்பாறிப்போக மிகவும் வாய்ப்பானதாக இவ்விடம் அமைந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

Vavuniya, J. S.



# பாலர்  பக்கம்



## அண்ணு சொல்வது :

அருமைச் சகோதரங்களே!

ஒருநாள் மூன்று பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். செல்லும்பொழுது வீட்டிலிருக்கும் தங்கள் அப்பா, அம்மாவை விட்டுத் தாங்கள் சில மணித்தியாலம் பாடசாலைக்குச் சென்று வருவது ஏன்? என்று தங்களுள் கதைத்துக் கொண்டார்கள்.

"புத்தி இல்லாத —எழுத்து வாசினை தெரியாத மடையனாய் இருக்க எனக்கு விருப்பம் இல்லை; ஆகையால்தான் பாடசாலைக்கு வருகிறேன்" என்ருன் ஜோண். "நான் படித்துப் பெரிய அப்புக்காத்தாக அல்லது டக்றராக வரவேண்டும்; அதனுல்தான் பாடசாலைக்கு வருகிறேன்" என்று பிலிப்பு சொன்ஞன்.

"நான் ........... தேவன் மோட்சத்தை விட்டுப் பூலோகத்துக்கு ஏன் வந்தாரோ, அதே நோக்கத்துக்காகவே — அதாவது பிறருக்கு உதவவே நான் வீட்டைவிட்டுப் பாடசாலைக்கு வருகிறேன்" என்ருன் யோசெவ். "எவ்வளவு படிக்கிறேனே, அவ்வளவு பிறருக்கு உதவி செய்யலாம்; படிப்பு கஷ்டமாய்த் தோன்றும் பொழுது, சிலுவையைப் பார்த்து, தேவசுதன் மரணிக்கிறதை நினைத்து, ஜோ, படிக்கிறது அதைப்போலக் கஷ்டமான காரியம் அல்ல; இப்பொழுது கஷ்டப்பட்டால் பிற்காலம் பிறருக்கு அதிகம் உதவி செய்யலாம். கடவுளைப் போல நானும் பிறருக்கு உதவ விரும்புகிறேன்" என்பான். ஜோவுடைய நியாயந்தான் சரி என்று நான் சொல்லுகிறேன்.

உங்கள் அன்புள்ள
அண்ணு

## தாயே! என்குறை தவிர்ப்பாய்!

'ஜெயம்'

1

பாவக் குளத்தில் அமிழ்ந்திவிட்டேன் — அந்தோ!
பாழும் உயிர்ஊச லாடுகுதே
சாவைத் தடுத்திட வந்திடுவாய்! — அம்மா!
சாந்தி பெறவழி தந்திடுவாய்!

2

ஈனப் பணவெறி லோபியைப்போல் — நானும்
ஈகையின்றிப் பவம் சேர்த்துவிட்டேன்
ஞானத் திருவழி காட்டிடுவாய்! — தாயே!
நம்பினேர் தஞ்சமே! காத்திடுவாய்!

3

கண்ணைக்கட்டி இருட் கூடத்திலே — ஒளி
காணத் தவிக்கிறேன் பேதமையால்
எண்ணற்ற பாவப் பழிசுமந்தேன் — பூவில்
ஏங்குகிறேன் தாயே! தாங்கிடுவாய்!

4

ஈசனைப் பெற்றபொற் கன்னிகையே! — யாரும்
ஈடிணை அற்றநற் கற்புருவே!
நீசன் எனக்கு நீ அன்றியொரு — நல்ல
நேசம் நிறைந்தவர் இல்லையம்மா!

5

தாயே! உங்கன் அருள்மடியில் — எனைத்
தாங்கி அணைத்திட மாட்டாயோ?
சேயின் அழுகுரல் கேட்கலையோ? — அம்மா!
செல்வத் திருமுகம் காட்டாயோ?

6

கொஞ்சும் குழந்தைதான் மேனியிலே — அள்ளிக்
குப்பையைக் கொட்டிடில் தாய்துடைப்பாள்
நெஞ்சம் துடித்துநான் வேண்டுகிறேன் — தாயே!
நின்மகன் என்குறை நீக்காயோ?

## நல்லபுத்தி பிறந்தது

அவரைத் தெருவில் கண்டதே பிள்ளைகள் எல்லோரும் "அதோ! பிலிப் சுவாமியார் போகிருர், போகிருர்" என்று சந்தோஷத்தினுல் துள்ளிக் குதித்துக் கொண்டு அவர் பிறகே ஓடிப் போவார்கள். பிறருக்கு எப்போதும் ஏதோ ஒருநன்மை செய்யவேண்டும் என்பதே அவரது ஆவல். அதனுல் அவரை எல்லோரும் அதிகம் நேசித்து வந்தார்கள்.

பிலிப் சுவாமியார் திவ்விய பூசை ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொருநாளும் சிறுவன் ஒருவன் திவ்வியநன்மை பெற்றதும் அவசரமாய்க் கோவிலை விட்டு வெளியேறி விடுவான். இதைச் சுவாமியார் தினமும் கவனித்துவந்தார். ஒருநாள் அவர் பூசைக்கு உதவிசெய்த பையன்கள் இருவரையும் அழைத்து, எரிந்துகொண்டு இருந்த இரு மெழுகு வர்த்திகளை இருவரிடமும் கொடுத்து "அந்தக் கவனமற்ற பையனின் பக்கமாக இருவரும் நடந்து போங்கள்" என்று சொல்லி அனுப்பினுர்.

இருவரும் விரைவாக நடந்து அவனை அணுகியதும் அவனின் இருபக்கமும் மெழுகு வர்த்திகளுடன் நடந்து சென்றனர். அப்போது அவன்: "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டான். "பிலிப்சுவாமியார் எங்களை அனுப்பினுர்" என்று இருவரும் கூறினுர்கள். அவனே "சனங்கள் எல்லாம் பிரமிப்புடன் என்னைப் பார்க்கின்ருர்கள்; அதனுல் என்னைவிட்டு அப்பால் அகன்று செல்லுங்கள்" என்ருன். அவர்களோ அகலவில்லை

உடனே அவன் மிகுந்த பரபரப்புடன் கோவிலுக்குத் திரும்பினுன். அதைப்பற்றிச் சுவாமியாரிடம் விசாரித்தபோது: "நீ தேவநற்கருணை பெற்றபின் உன்னிடம் எழுந்தருளி வந்த தேவனை ஆராதித்து, வணங்கி, நன்றி செலுத்துவதற்கு வேண்டிய நேரம் செலவிடாமல் உடனே கோவிலைவிட்டு வெளியேறி வந்தாய்; அதனுல் உனது கவனக் குறைவுக்குப் பரிகாரம்செய்து தேவனை மகிமைப்படுத்தவே நான் அவ்வாறு மெழுகுவர்த்திகளுடன் அவர்களை அனுப்பி வைத்தேன்" என்ருர் சுவாமியார்.

இதைக் கேட்டதே பையன் தனது பிழையை உணர்ந்தான், தலை கவிழ்ந்தான். தனக்கு நல்ல புத்தி கற்பித்த சுவாமியாருக்கு நன்றி கூறினுன். இனிமேல் அவ்விதம் செய்யமாட்டேன் என்று வாக்குப் பண்ணினுன். இந்தப் பிலிப் சுவாமியார்தான் இப்போது மோட்சத்தில் மகிமையுடன் தேவனைத் தரிசித்துக் கொண்டு இருக்கிருர், நாங்கள் தேவனை எப்படி நேசிக்க வேண்டும் என்று படிப்பித்திருக்கிருர், இவரே அர்ச். பிலிப்நேரியார் என்ற பெரிய அர்ச்சியசிஷ்டர்.

— எம். ஜே. எம்.

## அம்பி பெற்ற பரிசு

மருந்து குடிக்க மாட்டேன் என்று அம்பி பிடிவாதம் செய்தான். அந்த மருந்தின் மணம் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனுல், ஒவ்வோர்வேளை மருந்தும் குடிக்கும்போது அவனுக்கு ஒரு அணு தருவதாக அவன் அப்பா சொன்னுர். அதனுல் அம்பி சந்தோஷப்பட்டு மருந்து குடிக்க ஆரம்பித்தான். ஒரு சிறு உண்டியல் வாங்கி அதில் ஒவ்வொரு வேளையும் மருந்து குடிக்கும் போது ஒரு அணு போட்டு வந்தால் மாத முடிவில் மருந்து முடிந்ததும் எல்லாமாகச் சேரும் பணத்தைக் கொண்டு அவனுக்கு அவசியமான பொருள் ஒன்று பரிசு அளிப்பதாகவும் அப்பா சொன்னுர். ஒரு மாதம் ஆயிற்று. மருந்தும் முடிந்தது. உண்டியலைத் திறந்து எண்ணியபோது சரியாய் ஒரு ரூபா பதினுன்கு அணு இருந்தது. அம்பிக்கு வேண்டிய சாமானை வாங்கி வருவதாகச் சொல்லிப் பணத்தை எடுத்துக் கொண்டு கடைக்குச் சென்ருர் அப்பா. திரும்பி வந்ததும் அவர் கொண்டுவந்த சிறு பெட்டியை ஆவலுடன் திறந்தான் அம்பி. அதற்குள் என்ன இருந்தது என்று நினைக்கிறீர்கள். இன்னொரு புத்தம் புதிய மருந்துச்சீசா இருந்தது.

மாட்டின் எஸ். கோமஸ்
சென்மேரீஸ் பாடசாலை
மத்துகம.

## சின்ன யேசு பாலன்

மரியதாசன் பாலர் வகுப்பில் படித்து வருகிருன். ஓர்நாள் அவன் தனது அம்மாவுடன் கோவில் சென்ருன். அங்கு ஓர் அழகான பாலன் சுரூபம் இருந்தது. அதன் முகம் சிரித்த முகம். கையில் ஒரு உருண்டை. தலையில் ஒரு சின்ன முடி. கழுத்திலே ஒரு தங்கச் சங்கிலியும்; அதிலே ஒரு "ஹாட்"டும். காலில் சப்பாத்து இல்லை. இவைகளை அவன் நன்கு கவனிக்கிருன். பிறகு செபம் முடிந்து இருவரும் வீட்டுக்குப் போகிருர்கள். வழியிலே மரியதாசன் கோவிலில் தான் கண்ட சின்ன யேசு பாலனைப் பற்றிப் படிக்கத் தொடங்குகிருன்.

சின்ன யேசு பாலன் அம்மா
சிரிக்கி ருரே என்னைப் பார்த்து

பந்து கையில் வைத்துக் கொண்டு
பார்க்கி ருரே என்னை அம்மா

என்ன வடி வான பந்து
எனக்கு வாங்கித் தாங்கோ அம்மா

பால னிடம் கேட்டு அந்தப்
பந்தை வாங்கித் தாங்கோ அம்மா

மூன்று விரல் நீட்டிப் பாலன்
மோட்சத் தையா காட்டு ருங்க

பால னுக்குப் பாவம் காலில்
பாருங் கம்மா சப்பாத் தில்லை

கழுத்தில் தங்கச் சங்கிலி யும்
'ஹாட்'டும் ஒன்று அதிலே அம்மா

சின்ன முடி தலையில் அம்மா
செய்து யார் கொடுத்தாங் களோ

பால னுக்கு நான் கணக்குப்
பாடம் சொல்லிக் கொடுக் கட்டுமா?

ஒன்றும் ஒன்றும் இரண்டு அம்மா
ஒற்றை மாட்டு வண்டி அம்மா

ரண்டும் ரண்டும் நாலு அம்மா
ரண்டு குட்டி ஆடு அம்மா

மூன்றும் மூன்றும் ஆறு அம்மா
மூன்று குஞ்சுக் கோழி அம்மா

நாலும் நாலும் எட்டு அம்மா
நாலு குட்டிப் பூனை அம்மா

ஐந்தும் ஐந்தும் பத்து அம்மா
ஐந்து பணக் குதிரை அம்மா

ஆறும் நாலும் பத்து அம்மா
ஆறு தாண்டிப் பாயு தம்மா

பத்தும் பத்தும் சொல்லித் தாங்கோ
பட்டுக் குடை வாங்கித் தாங்கோ

பத்து வடை வாங்கித் தாங்கோ
பசிக்கு தம்மா வயிறு மெத்த

— J. A. G.

(அடுத்த பக்கம் பார்க்க)

பாலர்பக்கத் தொடர்ச்சி

## புறாவே! பற

புறவே! பற
புதிய லோகத்திற்குப்
புனித வாழ்வு பெறப்
புறவே! பற

1. அன்பு மறைந்திடும்
மண்ணகம் நீங்கி
அகந்தை நிறைந்திடும்
மானிலம் நீங்கி
இன்னல் மிகுந்திடும்
இத்தலம் நீங்கி
இனிமை விரும்பியே
எங்கும் பறந்திடு—(புறாவே)

2. உண்மை தழைத்திட
உயரப் பறந்திடு
ஒற்றுமை ஓங்கியே
உலவப் பறந்திடு
நன்மை செழித்திடர்
நலியப் பறந்திடு
நல்லவர் வாழ்ந்திட
நாளும் பறந்திடு—(புறாவே)

3. தன்னலக் கொடுமைகள்
தணியப் பறந்திடு
தற்பரன் கோபமே
தணியப் பறந்திடு
புண்ணியம் பூமியிற்
பொழியப் பறந்திடு
பொல்லாத நாஸ்திகர்
அழியப் பறந்திடு—(புறாவே)

—எம். வி.

## "நீ நல்ல பிள்ளை"

படுக்கையிலே அம்மாவோடு படுத்திருந்த ஜோர்ஜுக்குத் தூக்கம் வரவில்லை. அன்று அவனுடைய வகுப்பு மாணவன்ஒருவன் ஒருகத்தி கொண்டு வந்தான். அந்தக் கத்தியைப்பற்றி எல்லோரும் பேசிக் கொண்டனர். வெள்ளி போன்ற அந்தக் கத்திப் பிடியில் விழுந்திருந்த அந்த நீலக் கோடு. கூர்மையோடு மின்னிய கத்தியின் இரட்டை அலகுகளில் சின்னி விரல் போல் மடிக்கவும், விரிக்கவும் கூடியதாய் இருந்த அந்தச் சின்ன அலகு. ஒவ்வொன்ருக நினைத்துப் பார்த்தான் ஜோர்ஜ். எப்படியும் அப்படி ஒரு கத்தி வாங்கிவிட வேண்டும் என்று ஆசைப் பட்டான். ஒரு ரூபா வேண்டுமே. அப்பாவைக் கேட்டு, "கத்திக்கு ஒரு ரூபாவா?" என்று அவர் மறுத்து விட்டால் என்ன செய்வது? அம்மாவைக் கேட்கக் கூடாது. "கத்தியா? கையை வெட்டிக் கொள்ளுவாய், வேண்டாம்" என்பாள். ஜோர்ஜுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. மறு பக்கம் புரண்டு படுத்தான்.

அப்பாவின் அறைவெளிச்சம் கண்ணில் பட்டது. "அப்பா வர இன்று நேரம் செல்லும்" என்று அம்மா சொன்னது அவன் ஞாபகத்துக்கு வந்தது. நல்லசமயம், அப்பாவின் மேசை லாச்சியிலிருந்து பணம் எடுத்துக் கொள்வதெனத் தீர்மானித்தான். திரும்பிப் பார்த்தான். அம்மா தூங்கிக்கொண்டிருந்தாள். மெதுவாக எழுந்து அடிமேல் அடிவைத்து அப்பாவின் அறைக்குள் சென்றான். வாலை ஆட்டிக்கொண்டு வந்த நாயைச் 'சு!' என்று மெதுவாகத் துரத்தினான். மின்சார விளக்கை அணைத்தான். மெல்லச் சென்று லாச்சியை இழுத்தான். நெஞ்சு படபடென்று அடித்தது. நடுங்கிய கையால் லாச்சியைத் தடவிச் சில்லறைகளை ஒன்றுசேர்த்துப் பொத்திப் பிடித்து அள்ளினான். மெதுவாக லாச்சியைத் தள்ளினான்.

அப்போது வெளியே நாய் குரைத்தது. அப்பா அறையுள் புகுந்து விளக்கைப் பொருத்தினார். ஜோர்ஜ் அப்பாவைப் பார்த்தபடி திகைத்து நின்றான். ஜோர்ஜின் கண்கள் பயத்தால் உருண்டன. தேகம் நடுங்கி உதறிற்று. 'அப்பா! என்று அழுதபடியே தந்தையின் கால்களில் விழுந்தான். கையுள் இருந்த காசுகள் அறையுள் விழுந்து சிதறின. ஜோர்ஜ் உண்மையைச் சொல்லி மன்னிப்புக் கேட்டான். இனி ஒருபோதும் களவுசெய்ய மாட்டேன் என்றான். உண்மை பேசிய மகன்மேல் தந்தை இரங்கினார்.

"உனக்குத் தேவையானதைத் தருவதற்கு நான் இருக்கிறேனே; நீ கேட்ட போதெல்லாம் உனக்கு நன்மையானதைச் செய்ய வில்லையா? மகனே! நீ உண்மை பேசினாய்! நான் உன்னை மன்னிக்கிறேன்; நல்ல பிள்ளையாய் நட; இதோ ஒரு ரூபா" என்று சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாவை எடுத்துக் கொடுத்தார். ஜோர்ஜ் அந்த ரூபாவை வாங்கித் தந்தையிடமே திருப்பிக் கொடுத்தான். அப்போது தந்தை "உனக்குக் காசு வேண்டாமா?" என்றார்.

அப்பா! நான் செய்த பிழைக்கு அபராதமாக அந்தக் கத்தியை வாங்க மாட்டேன்" என்றான்.

தந்தை ஜோர்ஜைத் தட்டிக் கொடுத்து "நீ நல்ல பிள்ளை" என்றார்.

"பொன்"

## பொருமையே கெடுத்தது

ஒருஊரில் இரண்டு பிச்சைக்காரர் இருந்தனர். அவர்கள் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் பொருமை கொண்டு, ஒருவன் பிச்சை எடுத்த வீட்டிலே மற்றவனும் பிச்சை எடுத்துத் தங்களுள் போட்டி போட்டனர். அதனால் சில வேளை இருவருக்குமே ஒன்றும் கிடையாமல் போகும்.

ஒருதடவை அவ்வூரில் திருவிழா வந்தது. பக்கத்துக் கிராமங்களிலிருந்து அதைப்பார்க்கச் சனங்கள் நிறைய வந்தார்கள். இந்தப் பிச்சைக்காரருள் ஒருவன் தனக்குத்தான் நிறையப் பிச்சை கிடைக்க வேண்டும் என்று பேராசைப் பட்டான். அதனால் அவன் ஒருஅட்டையில், "ஐயா, நான் ஒரு ஊமை; என்னால் பேச முடியாது; ஏதாவது தருமம் கொடுங்கள்" என்று எழுதித் தனது கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டான். பிறகு சனக்கூட்டம் கொஞ்சம் அதிகமாக உள்ள இடத்துக்குச் சென்று ஒரு துணியைக் கீழே விரித்து அதன்முன் உட்கார்ந்து கொண்டு ஊமைபோலப் பாசாங்கு செய்து கையைக் கையை நீட்டினான்.

இதைக் கவனித்த மற்றப்பிச்சைக்காரன் அவனைப் போலத் தானும் செய்யவேண்டும் என்று நினைத்து, ஒரு அட்டையில் "ஐயா, அம்மா, நான் பிறவிக் குருடன்; என்னால் வேலை செய்யமுடியாது; ஏதாவது தருமம் கொடுங்கள்" என்று கத்தினான். திருவிழாவுக்கு வந்தவர்கள் அவன் குருடன்தான் என்று நினைத்து இரங்கி அவனுக்கு நிறையக் காசுபோட்டார்கள்.

ஆனால் "ஊமை"ப் பிச்சைக்காரனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால் இவன் தன்னையே மறந்து "குருட"னுக்குப்பிச்சைபோடுகிறவர்களைப் பார்த்து: "ஐயா, அம்மா! அவன் குருடன் அல்ல; வேணுமென்று கண்களை மூடிக்கொண்டு பாசாங்கு செய்கிறான்" என்று கத்தினான். அதைக் கேட்ட குருடனுக்கு ஆத்திரம் பிறந்தது. தன்னை அறியாமலே கண்களைத் திறந்து கொண்டு அவர்களைப்பார்த்து: "ஐயா, அம்மா, அவன் ஊமை அல்ல; அவனை நம்ப வேண்டாம்" என்றான்.

அவ்வளவுதான். பிறகு அந்த ஊரில் அவர்கள் எங்குபோனாலும் சனங்கள் அவர்களுக்குப் பிச்சை போடாமல் துரத்த ஆரம்பித்து விட்டார்கள். இப்பொழுது இருவரும் வேறு ஒருஊரில் ஒற்றுமையாக இருப்பதாகக் கேள்வி.

ஏ. எஸ். கோமஸ்
அர்ச். மரியநாயகி கல்லூரி,
மத்துகம

## வெறும் கை

கத்தோலிக்க வைத்தியசாலை ஒன்றில் ஒரு பெண் சாகும் தருவாயில் இருந்தாள். அவள் இருந்த வாட்டைப் பராமரிக்கிற கன்னியாஸ்திரி அரவம் இன்றி அருகில் சென்று அவளை உற்றுப் பார்த்தாள். வருத்தமாய் இருந்த பெண்ணுடைய கண்கள் கலங்கி, முட்டை(போன்ற)க் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தன.

"மகளே, ஏன் அழுகிறாய்?" என்று கன்னியாஸ்திரி அம்மாள் கேட்டாள்.

"நான் சாகப் போகிறேன் அம்மா; அதுவும் வெறும் கையாய்ப் போகிறேனே என்று துக்கப் படுகிறேன்" என்றாள்.

கன்னியாஸ்திரி தனது கழுத்தில் தொங்கியிருந்த குருசை அவிழ்த்து நோயாளியின் கையில் கொடுத்து "அழாதே, இந்தக் குருசை இறுகப் பிடித்துக் கொள்; ஆண்டவர் கூப்பிடுகிற நேரம் நிறைந்த கையுடன் போவாய்" என்றாள்.

## நீண்ட பிரசங்கம்

பக்தியுள்ள ஒரு மனிதன் கோவிலில் இருந்து ஆறு மைலுக் கப்பால் சீவித்து வந்தான். பூசைக்கு வர ஆறு கட்டைக்கு நடக்க வேண்டியிருப்பதைப் பற்றிக் கட்டளைச் சுவாமியாரிடம் குறையிரந்தான். அதற்குச் சுவாமியார்: "பயப்படாதே; ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஆறு கட்டை நீளமான பிரசங்கம் செய்யும் பாக்கியம் உனக்குத்தான் உண்டு; நீ வரும் வழிநீளம் உள்ள சனங்களுக்கு நல்ல சுவிசேஷம் போதிக்கிறாய்" என்றார்.

— எம். ஜே. எம்.

## கண்டு பிடியுங்கள்

### ஓர் அருமையான நூலின்பெயர்

இது ஐந்து எழுத்துகளால்ஆனது.

1-ம் எழுத்து — தேனில்உண்டு — பூவில் இல்லை.

2-ம் எழுத்து— அம்மாவில்உண்டு— அப்பாவில் இல்லை.

3-ம் எழுத்து — பாவில்உண்டு—நாவில்இல்லை.

4-ம் எழுத்து — வண்டில்உண்டு— தண்டில்இல்லை.

5-ம் எழுத்து — மணியில்உண்டு— கனியில் இல்லை. கண்டு பிடியுங்கள். முதல் இரண்டு எழுத்துகளையும் சேர்த்தால் ஆகும் சொல் இனிமையைக் குறிக்கும்.

விடை: தேம்பாவணி

— J. A. G.

## மூளைக்கு வேலை

ஒருவன் காட்டு மார்க்கமாகப் போய்க்கொண்டிருந்தான். போகும் வழியில் திருடர் அவனைப் பிடித்து, அவனிடம் இருந்த முட்டைகளை எல்லாம் பறித்துக்கொண்டு, அவனை விட்டுவிட்டார்கள். அவன் பக்கத்து ஊர் அதிகாரியிடம் போய்: "ஐயா, நான் கொஞ்சம் முட்டைகள் கொண்டு வந்தேன்; திருடர் பறித்துப் போட்டார்கள்" என்றான். அதிகாரி: "எத்தனை முட்டைகள்" என்று வினவினான். அதற்கு அவன்: அந்தத்தொகையை

2ஆல் பிரித்தால் 1 மிச்சம்வரும்.
3ஆல் ,, 1 ,,
4ஆல் ,, 1 ,,
5ஆல் ,, 1 ,,
6ஆல் ,, 1 ,,
7ஆல் பிரித்தால் சரியாக அடங்கும் என்றான். முட்டை எத்தனை?

விடை: 301 முட்டைகள்

எஸ். தம்பிராசா
கிறீஸ்துராசா பாடசாலை, முருங்கன்.

## பொழுதுபோக்கு

தாய் — தம்பி, நாலும், மூன்றும் எத்தனையடா? சொல்பார்ப்போம்.

மகன் — எனக்குத்தெரியாது அம்மா!

தாய் — இதோ, இந்தநாலுபழத்தையும் உனது சட்டைப்பை ஒன்றில் போடு; இந்தமூன்றையும் மற்றப் பையில்போடு; இப்போது ஒரு மிக்க எத்தனைசொல்.

மகன் — இருபது அம்மா!

தாய் — எப்படி?

மகன் — நீங்கள் தாமுன்னமே நான் கொஞ்சம் பழங்களை உங்களுக்குத் தெரியாமல் எடுத்து, அவற்றிலே போட்டுவைத்தேன்.

* * *

ஆசிரியர் — என்னவில்லி! "என்னுடைய தாய்" என்றவிஷயமாய் நீ எழுதிய வியாசமும், உன் தம்பியார் எழுதியவியாசமும் ஒரேமாதிரியாய் இருக்கின்றனவே; என்னகாரியம்?

வில்லி — சரிதான் சேர்! எங்கள் இருவருக்கும் தாய் ஒன்றுதானே.

* * *

ஆசிரியர் — (தனது மாணவர்களில் ஒருவனைப்பற்றி அவனுடைய தாய்க்கு எழுதியபோது) உங்கள் மகன் எனதுவகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லாரிலும் மிகுந்த புத்திசாலியும், கெட்டிக்காரனும். ஆனால், பொல்லாத குழப்படி காரனுமாய் இருக்கிறான்; நான் என்ன செய்யலாம்?

தாய் — (தாமதியாது எழுதிய பதிலில்) தங்கள் இஷ்டம்போல் என்னவும் செய்யலாம்; இங்கே அவனுடைய தகப்பனாரும் அப்படித்தான். அவரைச் சமாளித்து நடக்க என்ன செய்கிறதென்று எனக்குமே தெரியவில்லை.

* * *

டக்றர் — (நோயாளியைப் பார்த்து) இன்றுகாலை இருமல் அவ்வளவுகஷ்டமாய் இல்லையே!

நோயாளி — ஆம் ஐயா! இராமுழுக்கக் கண்ணோடுகண் மூடாது நன்றாக இருமப்பழகிக் கொண்டேன்.

* * *

வில்லி — (அயல்வீட்டில் வசித்த அன்ரனை நோக்கி) என்ன உங்கள் வீடு எந்தநேரமும் அமைதியாய் இருக்கிறதே; அப்படியானால் ஒரு சமாதான நீதிவான்தான் உனது அப்பாவுக்கும், அம்மாவுக்கும் கலியாணஞ்செய்து வைத்தார்போலும்.

அன்ரன் — என்ன, உங்கள்வீட்டில் இரவுபகல் எந்தநேரமும் சண்டையும், சச்சரவும், சந்தடியுமாக இருக்கிறதே; அப்படியானால் ஒருயுத்த மந்திரியார்தான் உங்கள் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் கலியாணஞ் செய்துவைத்தாரோ?

* * *

வில்லி அன்றுதான் புதிதாகப் பாடசாலைக்குச் சென்றான். அவன் மறுபடி வீடுவந்துசேர்ந்ததும் தாய் அவனை முத்தஞ் செய்துவிட்டு, தம்பி, பாடசாலையில் என்னநடந்தது? என்று கேட்டாள்.

வில்லி மறுமொழியாக, அம்மா, அங்கே "பூனை"க்கு எழுத்துக் கூட்டத்தெரியாத ஒரு அக்காச்சி வந்து என்னை எழுத்துக் கூட்டும்படி கேட்டா. நான் உடனே பூ—னை என்று எழுத்துக்கூட்டிச் சொல்லிவிட்டேன்.

* * *

நீதிபதி — (தமக்கு முன்பாக விசாரணைக்கு நிறுத்தப் பட்டிருந்த ஓர் பெண்ணைநோக்கி) உன்னுடைய வயது என்ன?

பெண் — முப்பது ஐயா.

நீதிபதி — கடந்த மூன்று வருடங்களாக இந்தநீதிஸ்தலத்தில் எப்போது பார்த்தாலும் முப்பது வயதென்று தானே சொல்லிவருகிறாயே.

பெண் — ஆம் ஐயா, இன்றைக்கு ஒன்றும், நாளைக்கு வேறொன்றும் சொல்லுகிற வழக்கம் எனக்குக்கிடையாது.

# அந்தோனி அனாதையா?

அன்று பால்போன்ற நிலாவின் தண்ணொளியானது இவ்வையகத்தைத் தங்கமய மாக்கிக்கொண்டிருந்தது. கடற்கரையில் தனிமையாய் உட்கார்ந்திருந்த ஜெயநாதன் ஒருதடவை வீதியைத் திரும்பிப் பார்த்தான். அப்பொழுது ஒருசிறுவன் அவ்வீதிவழியாய்த் தள்ளாடித்தள்ளாடி மேற்கேசெல்வதைக் கண்ணுற்றான். உடனே எதனையோநினைத்தவனாய்த் தான்உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்து தெருவின்சமீபமாகப் போய்நின்று மீண்டும் அச்சிறுவனை உன்னிப்பாய்க் கவனித்தான். அவன்பார்த்த சிறுவனுக்கு ஒருபத்துவயது மதிக்கலாம். உடலில் கந்தல் ஆடை. வாடிச்சோர்ந்த வதனம். பலநாட்களாக எண்ணெயைக் கண்டறியாத தலை. தளர்ந்த நடை. அந்நடையில் பசிக்களை நன்றாக இருந்தது. அவன்சாப்பிட்டு எத்தனை நாட்களோ, பாவம்!

ஜெயநாதனுக்கு அச்சிறுவன் யார், அவன் ஊர், அவன் பெயர் ஒன்றும் தெரியாதிருந்தும் அப்பரிதாப உருவத்தைப்பார்த்து நெஞ்சு நெகிழ்ந்தது. கஞ்சிக்குக் கஷ்டப்படும் சீவன்களில் அவனும் ஒன்றுபோலும்! அதுவும் இச்சிறுவயதில் ஒருஆத்மா இவ்வுலகில் உலாவுகின்றதே என்று எண்ணியவனாய் மீண்டும் சாலையிலே ஒருதடவை கண்ணோட்டம் விட்டான். ஆனால், அவன் கண்களுக்கு எட்டாத தொலைவில் சென்று மறைந்துகொண்டிருந்தான் சிறுவன்.

அப்பொழுதுதான் தன்னிடம் கால் ரூபா காற்சட்டைப் பையிலிருக்கும் ஞாபகம் வந்தது ஜெயநாதனுக்கு. அதைக் கொண்டுபோய்க் கொடுக்கலாமோவென்றால் அதற்கிடையில் சிறுவன் மறைந்துவிட்டான். "சரி, மீண்டும்ஒருமுறைகண்டால் அவனுக்கு என்னாலான உதவி செய்யவேண்டும்" என்று தனக்குள் எண்ணியபடி வானத்தை அண்ணாந்து பார்த்தான். செகசோதியாய் விளங்கிய சந்திரனை ஓர்கருமுகில் வந்து மறைத்துக்கொண்டது. ஆனால், சற்றுவேளையால் அந்தக்கருமுகில் அகலவே மீண்டும் இவ்வுலகைப் பார்த்துச் சிரித்தான் சந்திரன்.

"உலகமே இப்படித்தான் இருளுக்குப்பின் ஒளி. துன்பத்திற்குப்பின் இன்பம். இவை எப்பொழுதும் உலக சீவியத்தில் சர்வசாதாரணமாய் நிகழக்கூடியவை. இயற்கை அன்னையே இதைஎடுத்துக் காட்டுகிறாள்போலும்!" என்று எண்ணிக்கொண்டிருந்த ஜெயநாதனின் மனக்கண்முன்பாகச் சற்றுமுன்கண்ட அந்தச்சிறுவனின், பரிதாப உருவம் தென்பட்டது. ஆம்! அவன் யாருமற்றஅனாதையாய் இருக்கவேண்டும்; அதனால்தான் அவன் கவனிப்பாரற்றுப் பரதேசியாய், அன்னஆகாரமின்றி, நல்லஉடுப்புமின்றித் திரிகின்றான்போலும்! பாவம், யார்பெற்ற பாலகனோ! என்றுசிந்தித்துவிட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். "வீட்டிற்குச்செல்ல நேரம்ஆச்சுது" என்று அதுதெரிவிக்கவே, வீட்டைநோக்கி விரைந்து சென்றான்.

மறுநாள் காலை ஜெயநாதன் பூசை காண மாதாகோவில் சென்றிருந்தான். அவன் வழக்கமாயிருந்து பூசைகாணும் இடத்திற்குச் சற்றுத்தொலைவில் முதனாள்மாலைகண்ட அதேமுகம், அதே உருவம், ஆம், அதே சிறுவன் மேரைமரியாதையாகப் பூசைகண்டுகொண்டிருந்தான். ஜெயநாதனுக்குப் பூசையில் மனம்செல்லவில்லை. அச்சிறுவன் மீதே கவனம் சென்றது. கோவிலுக்குச்சென்று, அதுவும் பூசைகாணச் சென்று வேறுஎதையோ பராக்குப் பார்ப்பது தவறுதான். இருந்தபோதிலும் ஜெயநாதனின்மனம் உருக்கமாய் அச்சிறுவன்வசம் தாவியது.

பூசைமுடிந்தது. ஜெயநாதன் வெளிவந்துவிட்டான். மற்றவர்களும் மெல்லமெல்லக் கோவிலைவிட்டு வெளிகொண்டார்கள். ஆனால், அந்த ஏழைச்சிறுவன் இன்னும் வெளிகொள்ளவில்லை. வெளியிலே நின்றுகொண்டிருந்த ஜெயநாதன் கோவிலுக்குள் எட்டிப் பார்த்தான், சிறுவன் இருக்கிறானோவென்று அறிந்துகொள்ள. ஆம், அவ்வேழைச் சிறுஆத்மா முழங்காலில் நின்றபடி மேரைமரியாதையாகச் செபமாலை ஓதிக்கொண்டிருப்பதைக் கண்டான். அவனுடைய கோலத்தைப் பார்க்க ஜெயநாதனுக்குப் பெரியஅனுதாபம் ஏற்பட்டது.

பதினைந்து நிமிஷம் கழிந்தபின் சிறுவன் வெளிவந்தான். அவன்வரவைக் காத்திருந்த ஜெயநாதன் அவனிடம் சென்று: "தம்பி! இங்கே கொஞ்சம் வா; உன்னிடம்கொஞ்சம் பேசணும்" என்றான். அவனது கனிவான குரலைக் கேட்டுக் காதுகுளிர்ந்துபோன சிறுவன் தனதுநடையை நிறுத்தினான். அவனைச்சற்றே உற்றுப்பார்த்தான். "என்ன, என்னையா கூப்பிட்டீங்க?" என்று பலவீனமான, ஆனால் மிகமிகப் பரிதாபமானகுரலில், கல்லும் கரைந்துருகும் கனிவானமொழியில் கேட்டான்சிறுவன்.

"ஆம் தம்பி! உன்னைத்தான் அழைத்தேன்; என்னுடன் கொஞ்சம்வருவாயா? உன்னிடம் கொஞ்சம்பேசணும்; நீயார்? உன்பெயர் என்ன? அப்பா, அம்மா இருக்கிறார்களா? அல்லது........" என்று கேள்விமேற் கேள்வியாக அடுக்கிக்கொண்டே போனான் ஜெயநாதன். அவன்கேட்ட வினாக்கள் அத்தனைக்கும் சிறுவன் அளித்த விடை, பகர்ந்த மறுமொழி, கொடுத்தபதில் கண்ணீர்த்துளிகளே. ஆம்! கண்ணீர்முத்துக்களே. அவைகள் ஏதோவொரு சோகசரிதையை வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்டுவன போல் இருந்தன.

அதற்கிடையிலே "முதலில் அவன் பசியைஆற்று; அதன்பின் வேண்டிய மட்டும் வினாக்கள்போடு; அவனை ஏதும் ஒருகடைக்கு அழைத்துச் சென்று நல்லகாலைச்சாப்பாடு எடுத்துக்கொடு; உம், சீக்கிரம்செய் நான் சொன்னதை; பசியால் அவன் பேச முடியாமல் இருக்கிறான்" என்று ஜெயநாதனின்நெஞ்சு அவனுக்குக்கட்டளை பண்ணியது.

அதனால் உடனே அவன்: "வா தம்பி சாப்பிடலாம்; அந்தக் கடைக்குச் செல்வோம்" என்று ஒருகடைக்கு அவனை அன்புடன் அழைத்துச் சென்று சிறுவன் வயிறாரஉண்ண ஆகாரம் வாங்கிக்கொடுத்தான். சிறுவனும் புன்னகை பூத்தவண்ணம் அவனை அடிக்கொருதரம் பார்த்துக்கொண்டே சாப்பிட்டான். சாப்பாடுமுடிந்ததும் சிறுவனை அழைத்துக்கொண்டு தன் அறைக்குச்சென்றான். நாற்காலிஒன்றில் அமரச்செய்தான். பிறகு


"தம்பி! நான் கேட்கிறேன்என்று நீ கோபிக்கவோ, அல்லது அழவோ கூடாது; உன்மேல் இரக்கங்கொண்டு தான் கேட்கிறேன்; நீ யார்? உன் பெயர் என்ன? உனக்கு அம்மா, அப்பா இருக்கிறார்களா? உன்னை அறிந்தவர்கள் இவ்வூரில் இருக்கிறார்களா?" என்று கேட்டான் ஜெயநாதன்.

"அண்ணா, உங்களைப்போன்ற அன்புள்ளம் உடையவர்களுக்குச் சொல்லாமல் வேறுயாருக்குத்தான் சொல்வது? உள்ளதைஉள்ளபடியே உரைக்கிறேன்; கேளுங்கள், என் சோகக்கதையை" என்று பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

(தொடரும்)

எல். அருளானந்தம் — திரிகோணமலை

# தாத்தா பிடித்த குருவி




## முதலாம்படத்தைப் பாருங்கள் :

வயது போகப்போக, தலையும் வழுக்கை ஆகஆகத் தாத்தாவுக்கும் குழந்தைப்பிள்ளைப்புத்தி பிறந்துவிட்டது. சின்னப் பிள்ளைகளுக்குப்போல ஒருநாள் இருந்தாப்போல் அவருக்கும் குருவி ஒன்று பிடிக்கத்தான் வேண்டுமென்ற பெரியஆசை வந்துவிட்டது. சரிதான்என்று சட்டென எழுந்தார். கையிலே ஒருநீண்ட கயிற்றை எடுத்தார். அதில் தடம்ஒன்று சரிப்பண்ணினார். கொஞ்சம் தானியத்தையும் சட்டைப்பையில் எடுத்துப் போட்டுக்கொண்டு, தம்மைப்போலுங் காலங்கண்ட ஓர் பருத்த மரத்தண்டை போனார். ஓர் பக்கமாகத் தடத்தை ஏற்றினார். அதனுள் தானியத்தைப் போட்டார். கயிற்றை அம்மரக்கிளை ஒன்றில்மாட்டி அதன்தலைப்பை இரண்டு கையாலும் கெட்டியாய் இறுகப் பிடித்தபடியே அம்மரமறைவில் நின்று ஒட்டியொட்டிப் பார்க்கின்றார். தாத்தாவின் நல்லகாலத்துக்குப் போலும் கண்டதுஅப்பா தானியத்தைத் தலைபருத்த குருவிஒன்று. பறந்துபோய்த் தடத்தின் பக்கமாக நின்றதுஅப்பா, தனக்கும் நல்ல இரை அகப்பட்டது என்று நெடுநேரமாக நினைத்துக்கொண்டு.

## இரண்டாம்படத்தைப் பாருங்கள் :

கடைசியாக அந்தக்குருவி தடத்தினுள் இறங்கித் தானியத்தைக் கொத்தித் தின்றது. அதைக் கண்டுவிட்டார், மரத்தின் பின்னால் ஒட்டி நின்று பார்த்துக் கொண்டிருந்த தாத்தா. உடனே தமது முதுகையும் மரத்திலே மிண்டு கொடுத்துக் கொண்டு இரண்டுகையாலும் தமது பலமெல்லாங் கூட்டிக் கயிற்றை இழுக்க இதோ! ஆயத்தப்படுகின்றார்.

## மூன்றும்படத்தைப் பாருங்கள் :

இதோ! குருவியின் கால்வளையில் இறுகுகிறது என்று சொல்லியபடியே மிகுந்த ஓர்மத்துடன் தடக்கயிற்றை இழுத்த வேகத்திலே தடம்புரண்டு தாத்தா விழுகின்றார். பாலியத்தில் பழகிய குட்டிக்கரணம் ஒன்று போடுகின்றார். தாத்தாவின் இழுவைப் பிழையாலே குருவி தடத்திற்குத் தப்பிக் கொண்டு மேலே பறக்கிறது.

## நாலாம்படத்தைப் பாருங்கள் :

தாத்தா விழுந்த விழுகையிலே எழுந்துகொள்ள முடியாமல் தவளை போல் உட்கார்ந்திருக்கிறார். அதற்கிடையில் மேலே பறந்த குருவி திரும்பி வந்து தானியத்தைத் தின்றுகொண்டிருக்கிறது. தாத்தாவுக்குப் பெரிய ஆத்திரம். ஆனால், எழும்ப முடியவில்லை. என்ன செய்வதென்று அறியாது தவிக்கின்றார்.

### நான்குமைல் ஓடப்பண்ணியவன்

நாவலப்பிட்டியைச்சேர்ந்த இப்பூல்பிட்டித் தோட்டத்திலும், கிறீன்வூட் தோட்டத்திலும் சிலநாட்களாகக் கோழிகள் களவாடப்பட்டுவந்தன. அதனால் டொன் டினுஎனும் பொலிஸ்காரர் அழைக்கப்பட்டு விசாரணைநடத்திக்கொண்டிருக்கும்போது வில்லியம் சிங்கோஎனும்ஒருவன் ஓர் பெரிய கோழிக்கூடையையும் சுமந்துகொண்டு அப்பொலிஸ்காரர்முன் எதிர்ப்பட்டான். அவர் சந்தேகத்தின்பேரில் அவனைப் பிடிக்கமுயலவே அவன் கூடையையும் கீழேபோட்டுவிட்டு ஓட்டம்எடுத்தான். பொலிஸ்காரர் அவனைத் துரத்தியபோது அவன் இரண்டுஆறுகளையும், மூன்று கிராமங்களையும், இரு தோட்டங்களையும்தாண்டி நாலுமைல்தூரம் ஓடினான். என்றாலும் பொலிஸ்காரர் அவனை விடாது துரத்திச்சென்று அவனைப் பிடித்துக் கோட்டில்நிறுத்தி, அவனைக் குற்றவாளியாக்கினார். அவன் களவெடுத்துவிற்ற கோழிகளை வாங்கிய மூவர் அவன் கோழிக்கள்ளனென்று சாட்சிகூறினார்கள்.

### மலிவான இந்தியபுடவைகள்

நடுத்தர இனங்களைச்சேர்ந்த இந்தியபுடவைகளுக்கு விதிக்கப்பட்டுவந்த ஏற்றுமதிவரியை நீக்கிவிட இந்தியஅரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதனால் இலங்கையிலே இந்தஇன இந்தியபுடவைகளின் விலைவாசிகள் நூற்றுக்குப் பத்துவீதம் விலைகுறையவிருக்கின்றன. இந்தநயசுகத்தை இலங்கை மக்கள்அடைய இன்னும் ஒருமாதமாவது செல்லும்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 29-1953